# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்]  1942-ம் ௵ ஜூலை ௴ 11௳  [ந. 103

## புதுக்கோட்டை தேசீய யுத்த முன்னணி

### தொடக்கம்

*1942-ம் ௵ ஜூலை ௴ 10௳.*

---

I

**புதுக்கோட்டை ஸமஸ்தானம் ரா-அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் பிரசங்கம்.**

இன்று நாம் இங்கு தேசீய யுத்த முன்னணியைத் தொடங்கும் நோக்கத்தாற் கூடியிருக்கிறோம். இம்முன்னணி ஏற்கனவே தன் வேலையைத் தொடங்கி விட்டது. முன்பு யுத்த அறிக்கை நிலயம் என்று இருந்ததை, இப்பொழுது தேசீய யுத்த முன்னணி நிலயம் என்று புதுப்பெயர் புனைந்து அழைக்கிறோம். அதன் கீழ்ப் பத்துக் கிளைகள் உண்டு. இம்முன்னணியின் பணிகளை மேற்கொள்ள ஸமஸ்தானத்துப் பிரதான அதிகாரி ஒருவரும் நகரம் தாலூகா இவைகளுக்கு உரிய உதவியதிகாரிகளும் அவர்களின் கீழே நகரத்தின் பல பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் உதவுமாறு பல தலைவர்களும் உதவித்தலைவர்களும் இருக்கிறார்கள். பின்னே குறித்த உழைப்பாளிகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பது எனக்கு உறுதியாய்த் தெரியாவிட்டாலும் மேலதிகாரிகள் அனுப்பும் தினசரிக் குறிப்பிலிருந்து அதிகமான வேலை நடந்திருப்பதாகவே அறிகிறேன்.

மத்திய நிலயத்தாற் செய்யப்பெற்ற நற்பணியைப் பற்றி நான் நற்சாட்சி யுரைக்க வல்லவனாவேன். பிறிதோரிடத்தில் நான் தெரிவித்தது போலவே காப்டன் ஹார்வியின் ஊக்கத்தையும் உழைப்பையும் இழந்த பிறகு, அவர் இன்றி நமது நிலயம் எங்ஙனம் நிகழுமோ என்ற ஐயம் என்

உள்ளத்தில் எழுந்ததுண்டு. ஆனால் நான் அங்ஙனம் அதைரியம் அடைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நமது நிலயத்தால் வாரந்தோறும் வெளியிடப்பெறும் யுத்த அறிக்கைகளை மன்னர் சமக்ஷம் பார்த்திருக்க வேண்டும். சென்னையில் உள்ள ஒரு சிறந்த பத்திராசிரியர் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சமீபகாலத்தில் இந்த அறிக்கைகளின் உன்னத ஸ்திதியைப் பற்றித் தெரிவித்ததை நீங்களே பார்த்தீர்கள். இவ்வழியால் வரும் எல்லாப் பெருமையும் ராவ் சாஹிப் N. தியாகராஜ அய்யருக்குரியதே. பிரதான அதிகாரியாகிய ஸ்ரீ. சேதுராமய்யர் தாம் மேற்கொண்ட பணியிற் சிறந்த ஊக்கமும் உழைப்பும் விளக்குகின்றார். நகர அதிகாரிகளும் தாலுகா அதிகாரிகளும் அவருக்கு உற்ற துணையாக நின்று நன்றாகவே உழைக்கிறார்கள். கிளைகளின் அதிகாரிகள் அங்ஙனமே உழைக்கின்றனர். இவ் வெல்லோருக்கும் அவரவர் செய்து வரும் பணிக்காக இன்று இங்கு நன்றி கூறுகிறேன்.

இப்பணியின் ஒரு சிறந்த அம்சம் என்னவெனில் அது ஊதியம் எதிர்பாரா உழைப்பு என்பதேயாம். பிரயாணச் செலவுக்குமேல், எவரும் இதனால் லாபம் அடைவதில்லை. மத்திய நிலயத்தில் இக்காலத்தில் இப்படி ஊதியம் இன்றிப் பிரசங்கம் செய்வோர் ஒரு நூற்றுவர் இருப்பதாக அறிகிறேன். கிளைகளில் (நானே கேட்டு அறிந்திருப்பதற் கிணங்க, தெளிவாகவும் அழுத்தமாகவும் நன்கு பேசத்தெரிந்த பல பேச்சாளிகள் இருக்கிறார்கள். முன்னணி, உத்தியோக சம்பந்தம் இல்லாததே. தர்பாரின் பார்வையில் இது நிகழ்கின்றது. இதன் செலவு தர்பாரால் வகிக்கப்பெறுகிறது. ஆயினும் இது உத்தியோக சம்பந்தமில்லாத ஸ்வதந்திரச் சேவையேயாகும். இவ்வுண்மையால் புதுக்கோட்டை பெருமிதம் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இங்ஙனம் உழைக்கும் பிரமுகர் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாம். நம் ஆகாய விபத்து நிவாரண சேவகர்களைப்பற்றி இங்கே சில விஷயங்கள் சொல்லவிரும்புகிறேன்.

ஏ. ஆர். பி. கண்ட்ரோலர் பதவி வகிக்கும் போலீஸ் சூபரின்டென்டெண்டு, உத்தியோக சம்பந்தமில்லாத ஏ. ஆர். பி. அதிகாரிகள், உத்தியோக சம்பந்தமுள்ள ஏ. ஆர். பி. அதிகாரிகள் என்போர் வழி காட்டுதலாலும் எண்ணிறந்த வார்டன்கள், தூதர்கள் பிறர் இவர்கள் உதவியாலும், நான் இப்பொழுது மறக்கக்கூடாத போலீசார் ஒத்துழைப்பாலும் ஆகாய விபத்து நிவாரண சேவகர்கள் மிகவும் மதிக்கத்தக்க பயிற்சியும் திறமையும் பெற்றுள்ளார்கள். நமது சுருங்கிய நோக்கங்களுக்கேற்ப இவர்கள் தக்க பயிற்சியும் ஒழுங்கும் அடைந்து பொதுமக்களுக்கு உரிய செய்திகளைத் தக்கவாறு உணர்த்தியிருப்பது நான் எதிர்பார்த்த அளவுக்கு மேல் மிகுந்து விளங்குகிறது. இவ்வினத்தில் நாளெல்லாம் பார்க்கவேண்டிய சில பணிகள் இருப்பதால் இவர் எல்லோரும் சம்பளம் இல்லாச்சேவகர் இல்லை ஆயினும் அவருட் பலர் கௌரவ சேவகரே யாவர். சம்பளம் பெற்றோ பெறுமலோ உழைக்கும் இவர் எல்லோருக்கும் தர்பாரின் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் நான் எனது நன்றியை வெளியிட்டுரைக்க விரும்புகிறேன். மன்னர் சமக்ஷம் ஆகாய விபத்துப் பயிற்சியை ஒரு நாள் பார்க்க நேரிடலாம் என்று நம்புகிறேன். நமக்கு ஆலோசனை கூறும் அதிகாரியாகிய மிஸ்டர் மார்டின் இங்கு நடந்துள்ள வேலைகளைக் கண்டு மிகவும் மனமகிழ்ந்தார்.

இப்பொழுது போர் நிகழ்ச்சியைப்பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன். லிபியாவிலும் ருஷ்யாவிலும் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

'தோல்வி' என்ற சொல்லுக்கு நான் அஞ்சவில்லை. அது ஒரு சிறு பகுதித் தோல்வியே. நான் சொல்லவிரும்புவதெல்லாம் 'இது ஒரு சிறு விஷயம்' முக்கியத்வம் வாய்ந்த விஷயமே, மிகவும் துக்கம் விளைப்பதே, என்பதுதான். ஆனால் அளவுகடந்து இவ்விஷயங்களைப் பேசல் ஆகாது. போரின் முடிவை இது சிறிது நீட்டிக்கலாம். டோப்ருக், செபாஸ்டபூல் என்ற இரண்டு கோட்டைகளையும் இழந்தது பெரு நஷ்டமேயாயினும் இது போர்முடிபு இல்லை. இந்த கருநாட்களை, முடிபான வெற்றியில் நம்பிக்கையும் ஊக்கமும் தைரியமும் எழுதற்குச் சந்தர்ப்பம் தரும் காலமாகவே நீங்கள் கருத வேண்டும். போரைப் பூரணவுருவத்திலே பார்க்கவேண்டும். இப்பொழுது உள்ள நம் நிலைமையை, பிரான்ஸ் தேசம் தோல்வியுற, நாம் தன்னந் தனியே ஜெர்மனியை எதிர்த்துநின்ற நிலைமையோடு ஒத்துப்பார்க்க வேண்டும். இப்பொழுது நம் கட்சியில் உள்ள வல்லரசுகளின் வலிமையை அறியவேண்டும். பிரிடன், (தோல்விபெறாத) ருஷியா, ஐக்கிய நாடுகள், (ஜப்பானை ஐந்தாண்டுகளாக எதிர்த்து நிற்கும்) சீனா இந்நாடுகள் இப்பொழுது நம் இனமாம். நம் கட்சியில் (பல சிறு நாடுகளைத் தள்ளியே பார்த்தாலும்), நூற்றுமுப்பது கோடி மக்கள் நிறைந்த நாடுகள் உண்டு. ஜெர்மனியின் கட்சியில் இருபத்திரண்டு கோடியே முப்பதுலக்ஷம் மக்கள் உண்டு. இவருள் நாலுகோடியே ஐம்பதுலக்ஷம் தொகையுள்ள இத்தாலியர் உதவியாய் இருப்பதைவிட்டுப் பாரமாகவே இருப்பவர் ஆவர். ஜெர்மனியருக்கு ஏற்பட்ட அளவுகடந்த மனிதச் சேதத்தையும் இயந்திரச் சேதத்தையும் நினைத்துப்பாருங்கள். ருஷியரும் பெரு நஷ்டம் அடைந்திருக்கின்றனர் என்பது உண்மையே. ஆயினும் அந்நாட்டில் ஜனசக்தி ஒரு எல்லையில் அடங்காத பெருமையுள்ளதே. ஐக்கியநாடுகளின் ஜனசக்தியை இன்னும் நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நேரிட்ட நஷ்டம் மிகவும் சுருக்கமே. பிரிடிஷ், அமெரிக்க ஐக்கிய கடற்படையின் சக்தியைக் கவனியுங்கள். ஐக்கியநாடுகள், ருஷ்யா, பிரிடன் இவைகளின் தொழிற்றிறமையைக் கவனியுங்கள். கருட நோக்கமாக இனிவரும் பயன்களை நன்கு சிந்தித்துப்பாருங்கள். எந்தக் கட்சிக்கு வெற்றிவிளையும் என்பதில் நீங்கள் சிறிதேனும் ஐயம் உற இடமுண்டா?

ஆனால் நான் தேசிய யுத்த முன்னணியை மறக்கக்கூடாது. இதன் போக்கும் நோக்கமும் மன்னர் சமக்ஷத்தால் உங்களுக்கு நன்கு விளக்கப் படும். எல்லாராலும் அவை நன்கு உணரப்பட்டதாகத் தெரியவில்லை. சிலர் இது தலைவர்களுக்கே உரிய பொறுப்பு என்று நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையில் தன்னிடம் சேர விரும்பிய எல்லோரையும் சேர்க்கக் கருதியதேயாகும். பிறர் தமக்குள்ள 'பிறகாரியங்களால்' சேர அசக்தராய் இருப்பதாக வருந்துகிறார்கள். இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு உதவிகளைச் செய்வதைக்காட்டிலும் சிறந்த காரியம் என்ன இருக்கும் என்று எனக்குத்தெரியவில்லை. வெளிப்படையாகவே—பொறுப்பான பதவிகளில் உள்ள—சில பெருமக்கள் நாம் ஈடுபட்டிருக்கும் போரின் கடுமையை உணராமலே தமக்கு உரிய அற்பக்காரியங்களில், நாம் போரில் இறங்காதது போலவே நினைத்துக் கொண்டு—ஊக்கத்தோடு மனம் செலுத்துகிறார்கள். தேசிய யுத்த முன்னணி இத்தகைய மக்கள் இனத்தை விரைவில் நெருங்கி, உரிய உண்மைகளைத் தெளிவுற விளக்கி நன்னெறிக்கு வரும்படி செய்யவேண்டும். நமது சமூகத்தில் பொறுப்பற்ற இவர்களே மிகவும் தீங்கு விளைக்கும் ஆபத்துக்கு இடமான இனங்கள் ஆவர்.

நான் முன்பு தெரிவித்தது போலவே இம் முன்னணி தன்பணியை முன்பே தொடங்கிவிட்டது. முறைப்படி அதனைத் தொடங்கவேண்டும்

என்று கருதப்பெற்றது. இவ்வரும் பணியை மாட்சி தங்கிய மன்னர் பிரானாகிய தங்களைத்தவிர வேறு எவரும் தகுதியாகவும் பயன்படத் தக்க வாறும் ஏற்றுக்கொள்ள வியலாது என நினைக்கப்பட்டது. ஆகவே மன்னர் சமக்ஷம் இம் முன்னணியைத் தொடக்கம் செய்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வது எனக்கு வாய்த்த பெரும் பேறாகும்.

---

# II

## புதுக்கோட்டை மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் பிரசங்கம்.

எனது பிறந்த நாளில் என் ஸமஸ்தானமாகிய புதுக்கோட்டையில் தேசீய யுத்த முன்னணியைத் தொடங்கிவைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்தப் போரை வெல்லுவதற்கு உரிய திடசித்தத்தை இயக்குவதே தேசீய யுத்த முன்னணியாம் என்று சொல்லப்பெறுதல் நல்லதே. இந்த யுத்த முன்னணியிற்சேர்ந்த எல்லோரும் தோல்வி சாத்தியம் என்ற எண்ணத்துக்கு இடங்கொடாது, தோல்வியை அசாத்தியமாக்கி வெற்றியைச் சாத்தியமாக்கவல்ல நல்லுணர்ச்சியைத் தாமும் வளர்த்துக் கொண்டு பிறர் உள்ளத்திலும் வளர்த்து ஊன்றவேண்டும் என்பமே இதன் கருத்தாம். நமது பகைவரை முறியடிக்கத்தக்க முயற்சி எதுவும் செய்யாமலே, நேசதேசத்தார் தோல்வி பெறார் என்று நம்பிக்கையோடு வாய்ப் பேச்சில் சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் ஒன்றும் விளைந்துவிடாது. தோல்வி விளைந்து விடுமோ என்று எண்ணும் தகுதியற்ற கோழை யெண்ணத்தைப்போலவே, நமது மனத்துக்கு உவப்பாகிய நாட்டத்துக்கு அளவுகடந்த அத்தகைய நம்பிக்கையும் ஆபத்தைத் தருவதே ஆகும்.

வெற்றி நமதேயாகும் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கலாமாயினும் அந்த நம்பிக்கை நம்முள் ஒவ்வொருவரும் தத்தமால் இயன்றவளவு வெற்றி விளைத்தற்குவேண்டிய முயற்சியில் ஈடுபடுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். ஆகவே சுதேசத்திலும் ஸமஸ்தானத்திலும் அன்புபூண்ட—அதாவது இங்கு நான் காண்கின்ற ஒவ்வொருவரையும்—தேசீய யுத்த முன்னணியிற் சேர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் இம்முன்னணியின் வளர்ச்சி அரசியல் இயக்கமன்று; துரைத்தனத்தார் ஆதரவெல்லாம் பெற்றிருப்பினும் அதிகாரிகள் இயக்கமுமன்று. சிறிதும் இரக்கமற்ற பழியஞ்சாப்பகைவர் ை பிலிருந்து நம் நாட்டை காக்கவேண்டு மென்று விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் இம் முன்னணியில் இடம் உண்டு. கட்சியுணர்ச்சியையும் அரசியற் கொள்கைகளையும் மறந்து ஒத்த முயற்சிசெய்யும் நினைப்போடும் ஒரே மனவுறுதியோடும் எல்லோரும் இதன் கண் சேரவேண்டும்.

நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பதுபோலவே இக்காலப் போர்கள் படைஞர்களால் நிலத்திலும், நீரிலும், விண்ணிலும் நிகழும். அவ்வளவோடு நிற்பதில்லை. நமது பகைவர்கள் பிரசாரம் என்ற கொடும் படையையும் பயன்படுத்தியுள்ளனர்; இன்னும் பிரயோகித்து வருகின்றனர். முன்னாளில் ராஜதுரோகிகள் என்ற பெயரால் அழைக்கப்பெற்ற கூட்டத்தார் இந்நாளில் ஐந்தாம்படை என்ற புதுப்பெயர்பூண்டு இதற்குத்துணையாக உள்ளனர். தேசீய யுத்த முன்னணியின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் பகைவர் பிரசாரத்தை எதிர்ப்பதைத் தமது கடமையென்று கருதவேண்டும். துரோகச்செயல் என்று தோன்றும் எதுவும் தலையெடுக்கவொட்டாமல்

அழிக்கவும்வேண்டும். இந்த தேசத்துரோகி, தனது நாட்டிற் பகைவர் படை நுழையாக்காலத்திலே பகைவரை வெல்லமுடியாது என்று விளம்பரம் செய்து ஜப்பானியர் இந்தியாவை ஆக்கிரமிப்பதால் விளையும் நன்மைகளை எடுத்து உரைக்கும் விளம்பரகாரனுக இருக்கலாம். பீதியும் திகிலும் விளைக்கும் வதந்திகளை—அவை பிறந்த வழியைப்பிறர் அறியாவண்ணம் பரப்பும் வேலையிலும் இவன் ஈடுபட்டிருக்கலாம். இத்தகைய பொய் வதந்திகளைக் கண்டித்து உறுதியான அடிப்படையில்லாத வீண்பேச்சுக்களை மதிக்கலாகாது என்ற உண்மையை இம்முன்னணி விளக்குவதோடு, பிற நாடுகளின் துக்ககரமான அனுபவத்திலிருந்து ஜப்பானியர் ஆக்கிரமிப்பாலும் வெற்றியாலும் விளைவதென்னவென்பதைத் தெளிவாகப் புலப்படுத்தவும்வேண்டும். சிலர் உண்மையில் தேசத்துரோகிகள் அல்லராயினும், தமக்கு இயற்கையாகிய கோழைத்தனத்தால், நன்கு சித்தமாயிருக்கும் வலிமைமிக்க ஒரு பெரும் பகையை எதிர்த்து நிற்பது வீணே என்று நினைக்கவும் செய்யலாம். அத்தகையோரைக் கண்டித்து அவர்கள் அதைரியம் உண்மையில் தேசபக்திக்கு விரோதமானதே என்பதை விளக்கிக்காட்டவேண்டும். முன்னணியின் அங்கத்தினர் ஆகாயவாணியின் உதவிகொண்டு பகைவர் பரப்பும் செய்திகள் எல்லாம் நம்பத்தக்கனவல்ல என்பதை எப்பொழுதும் காட்டவல்லவராயிருக்கவேண்டும். அப்படிப் பரப்பிய செய்திகளிற் பெரும்பாலன முழுவதும் பொய்யாகவோ அல்லது வேண்டுமென்றே உண்மையைத்திரித்த புனைசுருட்டாகவோ இருப்பதை அனுபவத்தால் அறிகின்ருேம் எனவும் இவர்களே விளக்கவேண்டும். ஆகவே இவர்கள் உண்மையை நன்கு உணர்ந்தவராகவும், தெளிவாகவும், உறுதியாகவும் உண்மைத் துணைகொண்டு வாதம்செய்ய வல்லவராகவும் இருக்கவேண்டும்.

போர்ப்படையிற் சேர்வது என்பது எல்லோருக்கும் இயல்வதன்று. ஆனால் அங்ஙனம் சேரத் தகுதியுள்ளவர்களை ஊக்கம் கொடுத்து அனுப்பவேண்டும். நேரிலே போரிற் கலந்துகொள்ளாதிருப்பவர் போரில் வெற்றியான முடிவு நேரத்தக்கவாறு உதவி புரியத்தக்க பிறவழிகள் பல உண்டு. உதாரணமாக ஏ. ஆர். பி. வேலை உள்ளது. சமீப காலத்தில் விமானத் தாக்குதலோ படையெடுப்போ நேர்ந்துவிடும் என்ற பயம் சில நாட்களுக்கு முன் இருந்ததுபோல இப்பொழுது இல்லையாயினும், அந்த அச்சம் முழுதும் விலகிவிட்டதாகச் சொல்லவியலாது. இன்னும் நாம் ஆகாய விமானங்களால் தாக்குண்பதற்குச் சந்தர்ப்பம் உண்டாகலாம்; அதுவும் திடீரென்று நேரலாம். அந்த விபத்து நேரும் சமயத்தில் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்தவர் பலர் வேண்டும். அவர்கள் தங்கள் மனவமைதியை இழவாமல் தமக்கு ஆபத்து நேரினும், பிறர்க்கு உதவி செய்ய விருப்பமும் ஊக்கமும் உள்ளவராய் இருக்கவேண்டும். யாரும் உதவத்தக்க மற்ருெரு வழி, வீணன வழிகளில் பணத்தை அழிக்காமற் செலவுகளைச் சுருக்கி யுத்த சேம நிதியிலும் யுத்தக் கடனிலும் பணங்களைப் போடுவதாகும். மிகுதியான உணவுப் பொருள்களை விளைப்பதும் ஒரு வழியாகும். யுத்த காலத்தில் போதிய வளவு உணவு தருவதென்பது பெரிய பிரச்னையே. இந்த யுத்தத்தில் இன்னும் இது நீண்டு செல்லச்செல்ல இந்த அவஸ்த்தை மிகுதியாகலாம். இயல்பாகத் தான் பயிரிட்டுத் திரட்டிய தானியத்தைக் காட்டிலும் சிறியதளவேனும் அதிகமாக வளர்த்து எடுக்க வல்ல ஒவ்வொரு குடியானவனும் போர் முயற்சிக்குப் பேருதவி புரிபவனே ஆவான்.

இந்தப் போரின் நடைமுறையால் சிறந்த ஆயுதங்களும் இயந்திர சாதனங்களும் அவசியம் ஆகும் என்பது உறுதியாகின்றது. ஆனல்

இவை இருப்பதே போதுமானதாகாது. எவ்வளவு சிறந்த பீரங்கி இருந்தாலும் அதன் பின் நிற்பவன் திறமையால் அதன் சக்தி அளக்கப்படும். அவனும் தன் முறையே தனக்குப்பின் இருப்போர் துணையும் ஆதரவும் உண்டென்று நன்கு உணர்ந்தாலே நன்கு போர்புரிய வல்லவனாவான். வீரனுக்குப் பின்னின்று உதவும் பெரும்பணி தேசீய யுத்தமுன்னணியைச் சார்ந்ததே. ஆதலால், நீங்கள் எல்லோரும் நாட்டின் பொருட்டுப் போர் புரியும் வீரனுக்கு சிறிதும் யோசியாமல் உங்கள் பூரண ஆதரவையும் தர வேண்டுகிறேன். புதுக்கோட்டை நாட்டின் பூர்வீக சரித்திரத்தை அறிந்திருத்தலால் நீங்கள் விருப்பத்தோடும் அவாவோடும் செய்ய விரும்பும் உதவியையே நான் கேட்கிறேன் என்று துணிந்து கூறுவேன். ஆகவே இந்த தேசீய யுத்த முன்னணியை அது சிறந்த வெற்றிபெறுமாறு நடத்துவீர்களென்று நம்பி உங்களிடம் ஒப்பிக்கிறேன்.

---

## சைனு யுத்தத்தின் ஐந்தாவது வருஷக்கொண்டாட்டம்.

## செய்திகள்.

---

### ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.

"உங்களுடைய ஆயுதங்களும், படைகளும் எதிரியை விரட்டியடிக்கும் சீனமக்களும், அமெரிக்கர்களும், இதர நேசதேசத்தினரும் ஆகிய நாம் வெற்றியை முன்னிட்டு சண்டைசெய்து, சமாதானம், நீதி முதலியவைகளை உலகம் பூரா ஸ்தாபிப்போம்."

### மிஸ்ட்டர் சர்ச்சில்.

"ஐந்து வருஷங்களுக்குமுன் உங்கள் நாட்டில் எதிரி கொடுமையாகத் தாக்கினுன். கஷ்டமான அனுபவங்களேற்பட்டும் எதிரியை எதிர்த்து நிற்கிறீர்கள்.

யுத்தரங்கத்தில் நீங்கள் செய்துவரும் முயற்சியையும், புனருத்தாரண வேலையையும் பார்த்து உலகமே மெச்சுகிறது.

சைனுவிற்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் எதிரிகளுடன் எதிர்த்து நிற்கும் விஷயம் நன்ருகத் தெரியும். தற்சமயத்தில் பக்கத்தில் நின்றுகொண்டு நாம் இருவரும் சண்டைசெய்கிறோம். அமெரிக்காவின் பூர்ண உதவி நமக்கு இருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வேலையைத் தைரியமாகச் செய்யவேண்டும். ஐரோப்பா, மத்தியக்கிழக்கு முதலிய இடங்களில் நடக்கும் சண்டை சைனுவின் பாதுகாப்பிற்காகவும், சீன யுத்தம் பிரிடனின் பாதுகாப்பிற்காகவும்தான் நடைபெறுகின்றன.

சீனமக்களுக்குச் சாமான்கள் முதலிய எல்லாவித உதவியும் நாங்கள் கொடுக்கிறோம். முடிவான வெற்றியையும் நாம் அடைவோம்.

வெற்றி கிடைத்ததும் நமக்கு பரஸ்பரமுள்ள சிநேகத்தின் காரணமாக உலகம் பூரா சமாதானத்தை ஸ்தாபிப்போம்.

### சயாங் கெய் ஷெக்.

"ஆக்கிரமண நாடுகளை எதிர்த்துநிற்கும் நாடுகளின் முன்வரிசையில் நாம் இருக்கிறோம். சர்வதேசங்களின் நியாயத்தையும், தர்மத்தையும் நிலைநாட்டும் விஷயத்தில் நம்மை எல்லா நாடுகளும் கௌரவிக்கின்றன. நமக்கு ஏற்பட்டி

ருக்கும் ஆத்மபலத்தை வேறுபலம் குலைக்கமுடியாது. இதுவே வெற்றியடை வதற்கு ஒரு அடையாளம்.

"யுத்தத்தில் ஒரு ஆபத்தான நிலைமையிலிருக்கிறோம். தேசபக்தியின்படி நாம் அதிக தியாகங்களைச் செய்யவேண்டும். வயது முதலியவைகளைக் கவனியாது வெற்றிவரையில் சண்டைசெய்து ஸ்வதந்திரநாடுகளின் க்ஷேமத்திற்காகப் பாடுபடவேண்டும்."

---

# அமெரிக்க ஸ்வதந்திர தினவிழா.

(ஜூலை 4).

## I

## ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தி.

"பிலடல்பியாவில் ஆரம்பிக்கப்பட்டது, முதல் இவ்வளவு கடுமையான சந்தர்பங்களில் இந்த விழா நடந்ததில்லை. தற்சமயத்தில் ஸ்வதந்திரக் கொள்கைகள் யாவும் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. இந்த தினத்தின்போது டாங்கிகளும், விமானங்களும், பிரங்கிகளும, கப்பல்களும் கட்டப்படுகின்றன.

"ஒரு மணிகூட ஓய்வு எடுத்துக்கொள்ளச்கூடாது. ஒரு குண்டுகூட குறைவாகச் செய்யக்கூடாது. ஒரு அடிகூட பின்வாங்கக்கூடாது. இவ்விதம் நாம் இவ்வருஷம் ஈடுபடவேண்டும்.

"ஸ்வதந்திர மக்கள் நவீன நாகரீகத்திலுள்ள அம்சங்களை நிலைநாட்டவே உயிரைக் கொடுத்து சண்டை செய்கின்றனர். இந்த விழாவின் மூலமாக ஸ்வதந்திரத்திற்காகப் போர் புரியும் மக்களுக்கு உத்ஸாகத்தை அளிக்கலாம்."

## II

## இந்தியாவில் அமெரிக்காவின் வியவகாரங்களைக் கவனிக்கும் மிஸ்ட்டர் ஜார்ஜ மெர்ரல் செய்த ஒலிபரப்பு.

"இது வரையில் நாம் அடைந்த லக்ஷியங்களைப் பற்றியும், ஸ்வதந்திரத்தைப் பற்றியும் நாம கௌரவமாக நினைக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான அமெரிக்கர்களாவோம்.

"மேலும் நமக்குப் பெரியதொரு கௌரவம் என்னவென்றால் நமது ஸ்வதந்திரத்தைக்கொண்டு, அச்சு நாடுகளை எதிர்த்து நிற்கும் மற்ற நாடுகளுக்கும் உதவி செயவதுதான்.

"இன்று நாம் கொண்டாடும் ஸ்வதந்திர தினவிழாவை வருங்காலத்தில் அதிக சிரத்தையை வைத்தே நடத்துவோம். முன் நடந்தவைகளைப்பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். ஏற்கனவே அடைந்த புகழைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.

"நமது ஸ்வதந்திரம்தான் உண்மையானது. நமது லக்ஷியங்கள் எல்லாம் ஆத்மாவிற்கும் மனதிற்கும் உரியவை. இந்த இரண்டும் ஸ்வதந்திரம் பெற்றால் தான் சமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு. ஒரு தடவை ஸ்வதந்திரம் பெற்று மறுபடி அதை மறந்துவிட்டால் அது உண்மையான ஸ்வதந்திரம் அடைந்ததாக ஆகாது. நாம் உண்மை ஸ்வதந்திரத்தை அடைந்ததும் நீடித்திருக்கும் விதமான தியாகமும், பக்தியும், அதிக கவனமும் இருக்கவேண்டும்."

# வார யுத்தச் செய்திகள்.

## 4—7—42-லிருந்து 10—7—42-வரை.

**எகிப்து.**—ஒரு வாரமாக எல் அலமீனைப் பிளந்து செல்ல ரோமல் செய்த முயற்சி தடையுற்றது. சென்ற வாரத்தில் புதன்கிழமை மூன்று தடவை தாக்கினான். பிர் எல்ஷீன் வழியாகச் செல்லவும் முயற்சித்தான். ஆனால் வியாழக்கிழமை 3, 4 மைல் பின் வாங்கும்படி செய்யப்பட்டான். மறுபடி வெள்ளிக்கிழமை ஒரு புதிய தாக்குதலைச் செய்தான். அதுவும் பலிக்கவில்லை. சனிக்கிழமை 40 மைல் நீளத்திற்கு பீரங்கிச் சண்டை நடந்தது. இதன் முடிவில் எதிரியின் சாமான்கள் மேற்கே பின்வாங்கின. அதே தினத்தில் எல் அலமீன் பிரதேசத்திலிருந்து எதிரிப்படைகள் விரட்டப்பட்டன. ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் எல்அலமீனுக்குத் தெற்கில் சண்டை நடந்தது. ஒரு எதிரியின் ஸ்தானம் பிடிபட்டது. தெற்கே நோக்கியும் விரட்டப்பட்டான். திங்கட்கிழமை யன்று எதிரியின் சைனியத்தைச் சுற்றி நமது படை சூழ்ந்து கொள்ளப்பட்டது.

எதிரியின் நிலைமை எல்அலமீனுக்கு தெற்கே 20 மைல் தெற்கிலும், 30 மைல் மேற்கே எல்டாபர்வை நோக்கியும் மாறியிருக்கும். 'ட' இந்த உருவத்தில் இருக்கிறது. எதிர்பாராத விதமாக ஒரு நடவடிக்கையும் இல்லாமலிருக்கிறது. சீக்கிரத்தில் சண்டைகள் நேரலாம்.

'எகிப்து சண்டையில் முதல் கட்டம் முடிந்திருக்கிறது. பிரிடிஷ் எட்டாம் படை பலநாட்கள் வரை தீவிரமாக எதிர்த்து நின்று முன்னேற்றப் போரை நடத்தக்கூடியதாக இருக்கிறது.' எதிரியின் முயற்சிகளெல்லாம் தடுக்கப்பட்டன. ஆபிரிக்கப் படைக்குக் கொஞ்சமும் ஓய்வு கொடுக்காமல் தாக்கப்பட்டே வந்தது.

இந்த நிலைமையை 'ஆனலிஸ்டு' 6-ம் வ சொல்லும் போது 'எகிப்தின் ராணுவ நிலைமைத் திருப்திகரமாக இருக்கிறது. ஆரம்பம் முதல் எல் அலமீனில் ரோமலால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை என்பதிலிருந்து நமக்குச் சாதகமான அம்சங்கள் இருக்கிறதென்று தெரியவருகிறது. ரோமலுக்குப் பல பீரங்கிகளும் டாங்கிகளும் நஷ்டம்.

'குவாடரா முனையிலிருந்து பின்வாங்கும்படி எதிரிக்கு நேரிட்டிருக்கிறது. 6வ அறிவிக்கப்பட்டபடி அவனது முக்கிய ஸ்தானங்களை விடவேண்டியிருக்கிறது.

'விமான ஆதிக்கம் நமது வசத்திலிருப்பதால் நமக்கு அதிக சாதகம். முடிவு வரை நம்மால் சண்டை செய்ய முடியும்'.

**ருஷ்யா.**—எட்டு மாதகாலமாக எதிர்த்து நின்று ஸெபாஸ்டோபூல் சனிக்கிழமை எதிரி வசமாயிற்று. அதில் எதிரிக்கு லக்ஷக்கணக்கான பேர்கள் நஷ்டம். ஸெபாஸ்டோபூல் விழுந்தாலும் கருங்கடலில் ருஷ்யரின் ஆதிக்கம் குறையவில்லை. நோவோரோஸிஸ்க் (Novorossisk), கோஸாடூஸியா (Kossa Tusia) போன்ற வேறு நல்ல இடங்களும் இருக்கின்றன.

ஆனால் எதிரி மற்ற பாகங்களைக் கடுமையாக எதிர்க்க முடிகிறது. கொர்ஸ்க் பைலோராட், வால்ஷான்ஸ்க் போன்ற அரங்கங்களில் கடுமையாகத் தாக்கிவருகிறான். இப்படி மாஸ்கோ-ரோஸ்டவ் இருப்புப் பாதையைக் கைப்பற்ற நினைத்திருக்கிறான். குபயான்ஸ்க்கில் புகுந்து வோரோனெஷ் (Vovonej) வரை எதிரி வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கர்ஸ்கிற்கு 120 மைல் கிழக்கிலும் 70 மைல் தெற்கிலும் சண்டை நடக்கிறது. ரோஸ்டவ்விற்குத் தெற்கிலும் காகஸஸ் ரஸ்தாவில் சண்டை நடக்கிறது. டான் நதியைக் கடந்து ருஷ்யரின் சைனியங்களைத் துண்டிக்கவும் யத்தனிக்கின்றனர். வோரோனெஜ், ஸ்டாரி ஓஷோல்

இரண்டு இடங்களிலும் மிகக் கடுமையாகச் சண்டை நடக்கிறது. பைலோ கோராட்டிலிருந்து ஸ்டாரி வோரோனெஜ் படைகளுடன் சேர்ந்துகொள்ள எதிரிகள் முயற்சிக்கின்றனர். ஒஷோல் காலி செய்யப்பட்டது. யுத்தம் டான் நதிக்கு மேற்கே நடந்து கொண்டிருந்தாலும் ஜெர்மானியர் டான் நதியைக் கடந்திருக்கிருர்கள். வாரோனேஜுக்குத் தெற்கே 110 மைல் தூரத்தில் ரோஸோக் என்ற இடத்திற்கு அருகில் கடும் சண்டை நடைபெறுகிறது. நிலைமை நெருக்கடியானது.

லெனின்கிராட்டிலிருந்து ரோஸ்டவ்வரை எரிமலைபோல் நிலைமை காணப்படுகிறது. எந்த நேரத்திலும் சண்டை கிளம்பலாம். க்ஸாட்ஸ்க் (Gzhatsk)ல் சென்ற வாரத்தில் நடந்த சண்டையில் எதிரிக்குத் தாத்காலிகமான வெற்றிதான் கிடைத்தது. கலினின், ஸ்மொலென்ஸ்க் இங்கேயும் சண்டை நடைபெறுகிறது. மொத்தத்தில் பிரதேசம் பூரா ஜெர்மன் தாக்குதல் மும்மரமாக இருக்கிறது.

**சைனு.**—ஜப்பானியரின் கோடைகாலத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இருந்தாலும் நேசநாடுகளின் உதவிவரும்வரை பெரிய சண்டைகளைச் சீனர்கள் செய்யவிடமாட்டார்கள். கியாங்ஸியில் இஹ்வாங் நகரமும், ஸூயனில் லூசன் நகரமும் பிடிபட்டுத் திரும்பப்பிடிபட்டன. டைஹாங் மலைகளுக்கு அருகில் சீனர்களால் குறுக்கு எதிர்ப்புகள் செய்யப்பட்டன. செகியாங்கில் யூங்கா நகரம் திரும்பப்பிடிபட்டது.

அமெரிக்க விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்கின. எதிரியின் ஒரு பீரங்கிப் படகும், 10 விமானங்களும் ஹாங்கவ்விலும் லூசாங்கில் 50 கடல் விமானங்களும், கான்டனில் 20 விமானங்களும் தாக்கப்பட்டன. கடைசியாக 5 விமானங்கள் தான் தப்பி ஓடின.

அமெரிக்க வாலன்டியர் படை (A. V. G.) கலைக்கப்பட்டு சைனுவிலுள்ள அமெரிக்கச் சைனியத்துடன் சேர்க்கப்பட்டது.

**பர்மா.**—பிரிடிஷ் விமானப்படை அக்யாப்பிற்கு அருகில் மாயூ நதியில் இரண்டு தடவை கப்பல்கள் தாக்கப்பட்டன. கலெமியோவில் எதிரித் துருப்புகளும் தாக்கப்பட்டன.

அமெரிக்க ஸ்வதந்திர தினத்தன்று குவாஸனே அமெரிக்க மாலுமிகள் தாக்கினர்கள்.

**பஸிபிக்.**—அமெரிக்கச் சைனியமும், கப்பற்படை விமானங்களும் அலூஷியன் தீவுகளைத் தாக்கின. ஜூன்மீ 21, 28-ம் தேதிகளில் கிஸ்காவில் குண்டுகள் போடப்பட்டன. ஜப்பானியப் போக்குவரவுகள் அகட்டு (Agattu) தீவிற்கு அருகில் ஜூலையில் தாக்கப்பட்டன. இது அட்டு தீவிற்கு 35 மைல் தூரத்தில் தென்கிழக்கில் இருக்கிறது. ஸ்வதந்திர தினத்தன்று நேசதேச விமானப்படை தென்மேற்குப் பஸிபிக்கில் லேயி, ஸாலாமூவா இவைகளைத் தாக்கின.

**விமானப் படையெடுப்புகள்.**—ஜெர்மனியில் பெரிய விமான தளமான ப்ரெமன் தாக்கப்பட்டது. பிரிடிஷ் விமானிகளும் அமெரிக்க விமானிகளும் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் தாக்குதலைச் செய்தார்கள். வில்கென்ஸ்பர்க், ஆல்க்மார், ஹாம்ஷெட் முதலியவை பகல்காலத்தில் தாக்கப்பட்டன.

**கப்பல் சண்டை.**—1. ஸப்ளைகள் நிறைந்த பிரிடிஷ் கப்பல் கூட்டம் மால்டாவிற்கு பத்திரமாகப் போய்ச் சேர்ந்தது. எதிரிகளும் மிகக்கடுமையாகத் தாக்கினர்கள். எதிரிக்குத்தான் 20 பாம்பர்களும் ஒரு நீர் மூழ்கியும் சேதம்.

**வாண்டர்பிட்ஸ்** என்ற ஜெர்மனியின் பெரிய சண்டைக் கப்பல் டார்பிடோ செய்யப்பட்டது. பாரண்டுகடலுக்கு அருகில் ருஷ்ய நீர்மூழ்கியால் தாக்குண்டது. மறுபடி நார்வே கடற்கரைக்குச் சென்றுவிட்டது.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **29—6—42.** (திங்கட்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.**—ஹாஸிப்ரூக் (Hazebrouck). | | 5 விமானங்கள். | 3 விமானங்கள். |
| **இரவில்.**—ப்ரேமேன் (Bremen) வடமேற்கு ஜெர்மனியில் (Germany) மற்ற இடங்கள். | | | |
| **விரோதி விமான ஸ்தலங்கள்.**—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| **ரயில்வே கட்டடங்கள்.**—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| **கப்பல்கள்.**—பிரெஞ்சு (French)க்கடற்கரைக் கருகாமையில். | | 9 விமானங்கள். | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விரோதிக்குச் சொந்தமான மோட்டார் கூட்டம் டாங்கிகள்.**—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh)க் கருகாமையில். | | | |
| **துறைமுகப் பிரதேசம்.**—டொப்ரூக் (Tobruk). | 1 விமானி பத்திரமாக வந்து சேர்ந்தான். | 2 விமானங்கள். | |
| **தரையிலுள்ள விரோதி விமானங்கள், வண்டிகள்.**—டொப்ரூக் (Tobruk), ஸொல்லும் (Sollum) பிரதேசங்களில். | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| **விமானச் சண்டைகள்.**—போர்முனை எங்கும். | | | |
| தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **30—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விரோதி சைனியங்களின் கூட்டம்.**—போரரங்கத்தில். | | | |
| **மோட்டார் போக்குவரத்து, விமானமிறங்கும் இடங்கள்.**—பூகா (Fuka). | | | |
| **துறைமுகம், கப்பல்கள்.**—பெங்காஸி (Benghazi). | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| **விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.**—போர்முனை எங்கும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—6—42.** (செவ்வாய்க்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | தீக்கள் கிளம்பின. | | |
| | **ஸெலிபஸ் (Celebes)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—கேந்தாரி (Kendari). | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **போலீஸ் வாஸஸ்தலங்கள், அணி வதக்துமிடங்கள், துறைமுகத்திலுள்ள கப்பல்கள்**—லே (Lae). | | | |
| | **பூசந்தி.**—ஸாலாமுவா (Salamaua). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **துளகி** (Tulagi), பொகனிவயில் (Bougainville). | | | |
| **1—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமானமிறங்குமிடங்கள்**—ஸிடிபாரானி (SidiBarrani). | அநேக விமானங்கள் சேதமாயின. | இன்னும் 7 விமானங்கள். | |
| | **விரோதி டாங்கிகளின் கூட்டம், கவசம் பூண்ட வண்டிகள்.**—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்யா விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.**—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க பிரிடிஷ் விமானங்களால், | | | |
| | **ராணுவக் கட்டடங்கள்.**—டில்லி (Dilli). | | | |
| **2—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **இரவில்.**—ப்ரேமன் (Bremen) வடமேற்கு ஜெர்மனி (Germany)யில். | | | |
| | **விரோதி விமான தளங்கள்.**—ஹாலந்து பெல்ஜியம் (Low countries). | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.**-டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | 13 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதி சைனியங்களின் கூட்டம்.**—எல் அலமீனு (El-Alamein)க் கருகாமையில் டொப்ருக், (Tobruk). | | | |
| | **விரோதிகளுக்குப் பின்னல்.**-போராரங்கத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**2—7—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).
விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.- கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
டில்லி (Dilli).

**3—7—42.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).
விரோதித் துருப்புகள், வண்டிகளின் கூட்டங்கள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால்.
கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi).

ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).
விமானச் சண்டைகள்.— போரரங்கம் முழுவதிலும்.

தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விமான நிலயம்—லே (Lae).

தூரக்கிழக்கு— டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விரோதி விமான நிலயம்.—கொயபாங் (Koepang).

**4—7—42.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).
இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது.

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).
விரோதி டாங்கிகளின் கூட்டம், கவசம் பூண்ட வண்டிகள் —எல் அலமீனு (El Alamein)க்குத் தெற்கே டோப்ருக் (Tobruk).

ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).
விமானச் சண்டைகள்.— போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விமான நிலயம், விமானம் பறப்பதற்கு உதவுமிடம்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). — 8 விமானங்கள்.

தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
கோயபாங் (Koepang).

தூரக்கிழக்கு–பர்மா (Burma)–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விரோதிக் கப்பல்கள்.— அக்கியாப் (Akyab), நதிக்கருகாமையிலுள்ள மாயு (Mayu).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ராணுவ கட்டடங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | 1 விமானம்; இன்னும் 4 விமானங்களும் சேதமாயின. |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | | | |
| | ஸாலமன்—தீவுகள் (Solomon Islands)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | துளகி (Tulagi). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | டாங்கிகள், கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—சண்டை நடக்கும் பிரதேசம். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—6—42. (செவ்வாய்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்—கிழக்கு மிட்லாந்து (East Midlands). | | | |
| | இராவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசத்தில். | சேதமொன்றுமில்லை; 20 பேர் கொல்லப்பட்டனர். | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **பாலஸ்தீனம் (Palestine)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | ஹேய்வா (Haifa). | | | |
| **2—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | 8 விமானங்கள். 1-7-42. to 2-7-42. | 7 விமானங்கள். |
| | **எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | அலெக்ஸாண்டிரியா—(Alexandria) பிரதேசத்தில். | சொற்பச் சேதம். | | |
| **3—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—கடற்கரை ஜில்லாக்கள் கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| **4—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **பாலஸ்தீனம் (Palestine)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | ஹெய்வா (Haifa). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | | 1 விமானம். | |
| **5—7—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—7—42.** (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria), ஸூயஸ் (Suez) கால்வாயில். | | 5 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **5—7—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | பல வெடி விமானங்கள் சேதமாயின. | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசீய யுத்த முன்னணியின் ஆரம்ப விழா.** "தேசீய யுத்த முன்னணியை ஆரம்பிப்பதற்காக நாம் இன்று கூடியிருக்கிறோம். இம்முன்னணி ஏற்கனவேயே அலுவல்களைச் செய்துவருகிறது. முன்னிருந்த யுத்த அறிக்கை நிலயம் என்பதற்குத்தான் இப்புதுப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்திற்கு 10 கிளை ஸ்தாபனங்களை அமைத்திருக்கிறோம். இந்த நிலயத்தை ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டபோது, மாட்சி தங்கிய தங்களைத் தவிர வேறு எவரும் பொருத்தமாகவும், ஆழ்ந்த கருத்துடனும் ஆரம்பம் செய்ய லாயக்குள்ளவர்கள் காணப்படவில்லை. இம்முன்னணியை ஆரம்பித்துவைக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுவது எனக்கு ஒரு கௌரவமாகும்".

இந்த மொழிகளுடன் புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் துரையவர்கள், இச்சமஸ்தானத்தில் இம்முன்னணியின் ஆரம்ப விழாவைத் துவக்கிவைத்தார். அன்று டவுன்ஹாலில் ஜனங்கள் பூர்ணமாகக் கூடியிருந்தனர். அதற்கு 1 மணி நேரம் முன்பாக தேசீய யுத்த முன்னணி நிலயத்திலிருந்து புறப்பட்டு, ஒரு பர்லாங்கு நீளமுள்ள பெரிய ஊர்கோலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக டவுன் ஹால் வந்து சேர்ந்தது. இந்த ஊர்கோலத்தின் முன்பாகத்தை ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தர்களின் கோஷ்டி அலங்காரம் செய்தது. மாட்சி தங்கிய மன்னர்பிரானின் பிறந்த தினத்தன்று இவ்வரிய சந்தர்ப்பம் நடைபெற்றதால் மிகவும் பொருத்தமாகவே இருந்தது.

"தோல்வி என்ற பதத்திற்காக நான் அஞ்சவில்லை. டொப்ருக், ஸெபாஸ்டோபூல், இவை தனிப்பகுதித் தோல்விகளே. இவ்விதம் தோல்வி கிடைத்த சரி நாட்களை முடிவான லக்ஷியத்தின் பொருட்டு அதிக தைரியத்தையும், நம்பிக்கையையும் அடைவதற்கான சந்தர்ப்பங்களென்றே நினையுங்கள். யுத்தத்தைப் பூராவாகப் பரிசீலனை செய்யுங்கள். நமது பக்கம் சேர்ந்துள்ள ராஜ்யங்களைப் பாருங்கள். ருஷ்யாவின் மனித சக்தியைப் பாருங்கள். பிரிடன், அமெரிக்கா இவைகளின் கப்பல், தொழிற்சாலை சக்தியையும் கவனியுங்கள். தீர்க்க திருஷ்டியுடன் விஷயங்களைக் கவனியுங்கள். யுத்தத்தின் போக்கையும் பாருங்கள். இவ்வளவு விஷயங்களையும் கவனித்தும் வெற்றி எந்தப் பக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமுண்டா?" என்று ஸர் அலெக்ஸாண்டர் கூறினர்.

முன்னணியைத் திறந்துவைக்கும்போது மாட்சி தங்கிய மன்னர்பிரான் சொன்னதாவது :—"வெற்றிக்கான மனப்பான்மையை அமைத்துக்கொள்ளுவது தான் இந்திய இயக்கத்தின் கருத்து. இது ஒரு அரசியல் இயக்கம் அல்ல. அரசாங்கத்தாரின் ஒத்தாசை இருக்கிறதே தவிர இது ஒரு உத்தியோக முறையான ஸ்தாபனமல்ல. ஐந்தாம் படையினர் யாவரும் சொல்லாலும், நடத்தையாலும் துரோகிகள் தான். இந்நாடு எதிரியின் படையெடுப்பிற்கு உட்படாத காலத்தில் எதிரி அதிக பலம் வாய்ந்தவனென்று அவர்கள் பிரசாரம் செய்வார்கள். ராஜ துரோகத்தையும், வீண் பயத்தையும், தோல்வி மனப்பான்மையையும் நீங்கள் அகற்றுங்கள். சைனியத்தில் சேருங்கள். ஏ. ஆர். பி. படையில் சேருங்கள். உணவுகளை அதிகம் உற்பத்தி செய்யுங்கள். யுத்தத்திலீடுபட்டோருக்கு நம்பிக்கையுடன் உதவுங்கள். புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் புராதன சரித்திரத்தைக் கவனிக்கும்போது, நீங்களாக மனப்பூர்வமாக உதவத் தயாராக இருக்கிறீர்களென்ற பூர்ண நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இவ்வித வேண்டுகோளுக்கு புதுக்கோட்டை இணங்கி முன் வருமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. புராதன வழக்கப்படியும் நடந்துகொள்ளும். இப்பெரிய யுத்தத்திற்குத் தகுந்த சேவையைச் செய்யும்.

அன்று நடந்த சொற்பொழிவுகள் இவ்வறிக்கையின் மற்றொரு பாகத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. நமது நிலயம் செய்துவரும் வேலைகளைப்பற்றி ஊா-அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்கள் மெச்சிப் பேசியதற்கு நமது வந்தனத்தை அவருக்குத் தெரியப்படுத்துகிறோம்.

வி வி வி வி வீ வி வி

**பிரிடனில் தேசீய யுத்த முன்னணி.** 1. இங்கிலாந்தில் பணக்காரர்கள் 95 சதவிகிதம் வருமானவரி கட்டுகிறார்கள். முக்கியமான சாமான்களை 70 சதவிகிதமும், போக்குவரவை 30 சதவிகிதமும், இதர தேவைகளை 25 சதவிகிதமும், ஒவ்வொருவரும் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். மிஸ்ட்டர் J. H. ஹாட்ஸன் கொடுத்துள்ள விவரங்களைப் பார்த்தால் பிரிடனின் உள்நாட்டு நிலை தெரியவருகிறது.

போன வருஷத்தைவிட இவ்வருஷத்தில் அநேக கப்பல்கள் பழுது பார்க்கப்பட்டன. ஜெர்மானியரால் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கப்பல்கள் நடமாட்டத்தில் இருந்துவருகின்றன. சில கப்பல்கள் தான் மூழ்கடிக்கப்பட்டன. சமுத்திரத்தில் 9 மாதகாலமாக அமுங்கிக்கிடந்த கப்பலொன்று வெளியே கொண்டுவரப்பட்டு பழுதும் பார்க்கப்பட்டது.

ஒரு கப்பற் களத்தில் 10,800 டன் கப்பல் ஐந்து மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது. சாதாரண நிலைமைகளில் 9 மாதம் பிடிக்கும். மற்றொரு தளத்தில் 12 கப்பல் கட்டக்கூடிய அவகாசத்தில் 16 கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன. மூன்றாவது தளத்தில் ஒரு நிலக்கரி கப்பலை திட்டத்திற்கு 15 நாள் முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டது. நான்காவது தளத்தில் 1940 ஐக் காட்டிலும் 1941-ல் 30 சதவிகிதம் அதிகமாகக் கப்பல்கள் கட்டப்பட்டன. இவ்வருஷம் இன்னும் அதிகமாக இருக்கும்.

எல்லா வேலைக்காரர்களையும் நான் பார்த்ததில் தோட்டக்காரனும், ரொட்டி சுடுபவனும் 19 வருஷம் வேலைபார்த்த ஒருவன் கப்பல் வேலையில் ஈடுபட்டிருந்தான். ஸினிமா வேலைக்காரன் ஒருவன் மின்சார வேலையில் ஈடுபட்டிருந்தான். ஒரு குஸ்தி பழகுகிறவன் கப்பற் தளத்தில் வேலைக்காரனுகவும் இவ்விதமாகப் பலர் பல வேலைகளைச் செய்து வந்தனர். ஸ்திரீகளும் ஈடுபட்டிருந்தனர். சிறு பாரம் தூக்கும் யந்திரங்களையும் பத்தவைக்கும் வேலையிலும், பூச்சு வேலை முதலியவைகளிலும் ஸ்திரீகள் ஈடுபட்டிருந்தனர். புருஷர்கள் தொடர்ந்து 34 நேரம் கூட வேலை செய்திருக்கிறார்கள். ஆனால் முறை போட்டுக்கொண்டு வேலை செய்வது தான் சகஜமாயிருந்தது.

3. இதே விதமாகத் தான் யுத்தக் கப்பல் கட்டும் தொழிலும் நடைபெறுகிறது. பிரிடிஷ் கப்பற் தளத்தில் ரஜாநாட்களிலும் 12 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இது தவிர நாலுவாரங்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு வேலைக்காரனும் 24 மணி நேரம் உள்நாட்டுப்பாதுகாப்பு வேலைகளில் பயிற்சி பெறுகிறான். 8 வாரங்களுக்கு ஒரு நாள் இரவில் நெருப்பு அணைக்கும் வேலையைக் கற்றுக்கொள்வதற்காக 1,000 கணக்கான பேர்கள் முன்வருகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**பலிக்காத வசந்தகாலத் தாக்குதல்.** இவ்வருஷ ஆரம்பத்தில் கிழக்கே ஜப்பான் வெற்றிமேல் வெற்றியடைந்த சமயத்தில் ஜெர்மனியும் ஐரோப்பாவில் தாக்குதலைச் செய்து நேசநாடுகளின் பலத்தையும், கவனத்தையும் வேறு பக்கங்களில் செலுத்த முடியாமல் செய்ய எத்தனிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வசந்த காலதாக்குதல் பூரணமாக நடைபெறவில்லை. ஹீட்ரிச் கொலை செய்யப்பட்டதும், ரன்ஸ்டெட் விஷிக்கு மாற்றப்பட்டதும், ஹிட்லர் அதிக அதிகாரங்களைப்பெற்றதும். ஜெர்மனிக்குள்ள சிரமங்களைத் தெரியப்படுத்துகின்றன. டென்மார்க்கில் நிலைமை சரியாக இல்லை. ஆக்கிரமித்த நாடுகள் கலகம் செய்கின்றன. ஜெர்மனிக்குச் சொந்தமான அட்லாண்டிக் கடற்கரை ஆபத்துக்குள்ளாகிவிட்டது. தரையிலும், ஆகாயத்திலும் ஆங்கிலேய-அமெரிக்கப் படைகள் குவிகின்றன. போராக்குறைக்கு இரண்டாம் போர்முனையைப் பற்றிய பேச்சும் ஏற்பட்டிருக்கிறது. மாரிகாலத்தின் மத்திய பாகத்தில் கூட ருஷ்யத் தாக்குதல் குறையாமல் நடந்தது. பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதலும் நிறுத்தப்படவில்லை. வசந்தகாலம் வந்ததும் ருஷ்யர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்தனர். பிரிடிஷார் 1,000கணக்கான விமானங்களைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்குகின்றனர்.

இவ்விதமாக பலபக்கங்களிலும் தொந்திரவடைந்ததால் துருக்கிபேரில் ஹிட்லர் கொஞ்சம் பலாத்காரத்தைச் செய்ய ஆரம்பித்தான். ஆனால் துருக்கியர்கள் அதற்கிணங்கவில்லை. பிறகு விஷியை வசப்படுத்தப் பார்த்தான். அதுவும் பலிக்கவில்லை. மால்டாவைப் படையெடுத்தான். மால்டா எதிர்த்து நிற்கிறது. மத்தியதரைக்கடலிலும், ஆர்க்டிக் சமுத்திரத்திலும் செல்லும் நேசநாட்டுக்கப்பல்களைத் தடுக்கப்பார்த்தான். அவைகளும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் வசந்தகாலம் வரவர ஜப்பானியரும் அதிகமாக அடையக்கூடிய வெற்றி நிலைமையை அடைந்துவிட்டார்கள். இனி அதிலிருந்து திரும்ப வேண்டியதுதான், கொழும்பு, பவளக்கடல், மிட்வே இங்கு நடந்த சண்டைகளால் ஜப்பானிய முன்னேற்றம் தடைபட்டது. இதுதான் நடைபெறாத வசந்தகால தாக்குதலைப்பற்றிய கதை.

வி வி வி வி வி வி வி

**கோடைகால நிலை.** கோடைகாலம் வந்துவிட்டது. எகிப்திலும், ருஷ்யாவிலும் ஹிட்லர் பெரிய பின்ஸர் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான். டொப்ருக்கும், ஸெபாஸ்டபூலும் வீழ்ந்துவிட்டன. இவ்வளவிருந்தும் இவை ஒரு பெரிய தாக்குதல் என்று சொல்ல முடியாது. மூன்று வருஷங்களாக யுத்தங்களைச்செய்து ஹிட்லர் ஒரு விதத்திலாவது வெற்றியடையவில்லை. உள்நாட்டு நிலைமைச் சரியாக இல்லாததால்

யுத்தரங்கத்திலாவது ஏதாவது செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறான். ருஷ்யச் சைனியத்தை இந்தக் கோடைகாலத்தில் விரட்டியடிக்காவிடில் அவன் நிலைமை மோசமாகிவிடும். பிரிடிஷ் பொருளாதார முற்றுகை அவனை அதிகம் நிர்ப்பந்தித்து வருகிறது. இந்த நிர்ப்பந்தத்தை அவன் தீர்த்துக்கொள்ளாவிட்டால் பட்டினிகிடக்க வேண்டியதுதான். காகஸஸை அடையாவிடில் அவன் விமானங்களுக்கு எண்ணெய் கிடைக்காது. ருமேனிய எண்ணெய் தளங்களை எல்லாம் அமெரிக்க விமானங்கள் தாக்கிவருகின்றன.

எகிப்தில் டொப்ருக் வசப்பட்டிருந்தாலும் ஹிட்லரின் நிலைமை மோசமாகயிருக்கிறது. 1940-ம்வருஷத்தில் கிரேஸியானி எகிப்து மேல் படையெடுத்து வந்த நிலைமையைக் காட்டிலும் பிரகிருத நிலைமை மாறுபட்டிருக்கிறது. அந்த சமயத்தில் ரோமலைப்போல் கிரேஸியானியும், முன்னேறியிருந்தால் எகிப்து வரையிலும் வந்திருக்கலாம். ஏனென்றால் 1940-ல் எகிப்தின் பாதுகாப்பு அவ்வளவு சரியாக இல்லை. அத்துடன் பிரிடன் பேரில் செய்யப்பட்ட மின்னல் படையெடுப்பை எதிர்க்க வேண்டியிருந்தது.

இப்பொழுது ரோமலின் படையெடுப்பு கிரேஸியானி படையெடுப்பைவிட பலமாகயிருக்கிறதென்றால் பிரகிருதமுள்ள நேசநாட்டு நிலைமையும் அதேவிதமாக பலமடைந்திருக்கிறது. 1940-ல் ருஷ்ய யுத்தம் ஆரம்பிக்கப்படவில்லை. அமெரிக்க ஸப்ளை மார்க்கங்கள் ஏற்படவில்லை. 30 நாடுகள் ஒன்றுசேரவில்லை. இராக், இரான், பாலஸ்தீனம் முதலிய இடங்களிலிருந்து எகிப்துக்கு உதவி வரவில்லை. இவ்வளவு சாதகங்களும் தற்போது ஏற்பட்டிருக்கின்றன.

நினைத்தபடி பிரிடிஷ் சைனியத்தைப் பலப்படுத்த முடியும். தேவையானால் இந்தியாவுக்கு வந்த துணைக்கப்பல் கூட்டம் போன்ற ஒரு கூட்டத்தை ஆச்சின்லிக்கின் உதவிக்கு அனுப்பமுடியும்.

இப்பொழுது ஹிட்லரின் தோல்வியை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டே பிரிடனின் பலம் விருத்தியாகி வருகிறது. மெடகாஸ்கர் நன்றாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் பிரிடன் சும்மா இருந்துவிடவில்லை.

டொப்ருக் போன்ற நகரங்கள் எதிரிவசமானதால் பாதகமில்லை. நேசநாடுகளால் மறுபடி அவைகள் திரும்பி அடையப்படும். அதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கும். தற்சமயத்தில் ஒரு காரியத்தை சாதிக்கவேண்டுமானால் அதற்குத் தகுந்த திட்டங்கள் முன்னாலேயே போடப்பட்டிருக்க வேண்டும். அதேவிதமாக இப்பொழுது திட்டங்கள் போடப்பட்டிருப்பதால், அவர்களின் காரியாம்சையைக் காட்ட கொஞ்சகாலம் பிடிக்கும். பிரிடிஷ் விமானப்படை 1940-ல் கடும் சண்டைசெய்து தன் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியிருந்தது. தற்சமயத்திலோவெனில் முன்னேற்றப் போரை நடத்தி வருகிறது. இதிலிருந்தே நமது பலத்தைக் காணலாம்.

வெற்றியடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் நேசநாட்டு யுத்த தந்திரம் இருந்துவருகிறது. இது ஹிட்லரின் தந்திரத்தைவிட சாமர்த்தியமானது. யுத்த அரங்கங்கள் பலவிடங்களில் இருக்கலாம். இருந்தாலும், யுத்தம் ஒன்றுதான். எம்டன் நகரின் பேரில் ஒரு குண்டுபோட்டாலும் ருஷ்யாவில் ஜெர்மன் முன்னேற்றம் தடைபடும். மடகாஸ்கரில் ஒரு புதிய விமானதளம் ஏற்பட்டாலும் இந்தியாவுக்கு வெகு தூரத்திலேயே ஜப்பானியர்களை நிறுத்த ஹேதுவாகும். மத்தியதரைக்கடலில் அச்சுநாட்டு கப்பல் கூட்டத்தைத் தாக்கினாலும் ரோமல் முன்னேற முடியாது. இந்தக் கஷ்டமிருப்பதினால் ரோமலின் வெற்றிகள் தாத்காலிகமாகத்தான் ஏற்படும்.

கிரேஸியானிக்கு வந்த தோல்வி ரோமலுக்கும் வரும். பரோவிஸ் காலம் முதல் எகிப்துக்குள் சைனியங்கள் வருவதும், போவதும் சகஜம்தான். ஆனால் எதிரிச் சைனியங்கள்தான் அழிந்திருக்கின்றன. படையெடுப்போருக்குச் சிரமம் தான்.

**டொப்ருக்.** இங்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகம். ஆனால் விஷயங்களைப் பூரணமாகப் பரிசீலனை செய்யாமலிருக்கக்கூடாது. அது எதிரி வசமானதால் நமக்கு டாங்கி பலம் குறைந்துவிட்டது. எதிரியின் ஸப்ளை மார்க்கம் சுலபமாகிவிட்டது. பிரிட்டிஷ் கான்வாய் மார்க்கங்கள் எதிரியின் தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன. ஸைப் ரஸுக்கும், ஹெய்பாவுக்கும் போகும் மார்க்கங்கள் ஆபத்துக்குள்ளாகின. ஹிட்ல ரின் காகஸெஸ் தாக்குதலை ஒத்தபடி ரோமலின் தாக்குதல் இருப்பதால் ருஷ்யா வுக்கும் அதிக ஆபத்துதான். நைல், ஸூயஸ் முதலிய பிரதேசங்களுக்கு பயம் ஏற்பட்டிருப்பதால் கிழக்கு, தெற்கு ஆபிரிக்கா பாகங்களுக்கு எதிரிகள் வர முடி யும். இதனால் ஜப்பானியர்கள்/தரை மார்க்கத்தை உபயோகித்துக்கொள்ள முடிந்துவிட்டது. இது இப்படியிருந்தும் நேசநாடுகளின் நிலைமை மிகவும் பல முள்ளதாயிற்று. லிபியா, எரிட்ரியா, ஸோமாலிலாந்து, அபிஸீனியா முதலிய இடங்களைத் தனியாக வேவல் சமாளித்த நிலைமையைக் காட்டிலும், பிரகிருத நிலைமை திருப்திகரமானது. நமக்கு ஸப்ளைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தளங்களுக்குச் சமீபம்வரை ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. விமானம், பீரங்கிகள் இவைகளில் நமக்கு நிச்சயம் ஆதிக்கம் இருக்கிறது. இவைகளைக் கண்டு எதிரி தயங்க வேண்டியதுதான்.

நமது தோல்விகளின் போக்கு மாறியிருக்கிறது. திருப்திகரமான செய்தி கள் வந்துகொண்டிருக்கின்றன. நிலைமை மோசமானதல்ல. ரோமல் சற்று பின்வாங்கும்படி செய்யப்பட்டிருக்கிறான். பீரங்கிகளும், டாங்கிகளும் அவனுக்குச் சேதமாயின. குவாடரா முனையிலிருந்து விரட்டப்பட்டிருக் கிறான்.

வி வி வி வி வி வி வீ

**எகிப்து.** அச்சு நாட்டுப் படைகள் எகிப்தினுள் புகுந்த திலிருந்து யுத்தத்தைக் குறித்து எகிப் திற்கு எவ்வித மனப்பான்மை இருக்கிறதென்று யாவரும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அது நடுநிலைமையை வகிக்கிறது. இருந்தாலும், ஜன நாயகத்திற்கும், பிரிடனுக்கும் அதிக தயவைக்காட்டும். இவ்வபிப்பிராயத்தை எகிப்து அரசியல் சபையில் 185 பேர் அனுசரித்தனர். 5 பேர்தான் பாதகமாக யிருந்தனர். தற்காலம் பிரதம மந்திரியாக யிருக்கும் நஹஸ் பாஷா பலதடவை களில் சொல்லியிருக்கிறார். அலி மாகர்பாஷா என்பவன் அச்சு நாடுகளுக்குச் சாதகமாக இருப்பதால் அவனைக் கைதி செய்தபோது நஹஸ் பாஷா பின்வருமாறு சொன்னான்:—'எகிப்தின் அயல்நாட்டுமுறை யுத்தத்தைத் தவிர்க்கப் பார்க்கிறது. எகிப்தின் ராணுவ நேயநாடான பிரிடனின் க்ஷேமத்திற்குக் குறைவாக நடந்து கொண்டால் தண்டிக்கப்படுவார்கள். ஜன நாயகத்தையும், ஸ்வதந்திரத்தையும் நிலைநாட்ட சண்டையிடும் நாடுகளுக்கு பயத்தை விளைவிக்கக்கூடாது. இதுவே எனது திட்டம். இவ்வபிப்பிராயத்தை பிரிடனும், பிரிடிஷ் சைனியங்களும் அறியலாம்.' நஹஸ் பாஷாவின் வார்த்தை வாப்து கக்ஷியிலுள்ள குடியானவன், தொழிலாளி, வேலைக்காரன், மிராசுதார், மாணக்கன், முதலிய யாவருடைய அபிப் பிராயத்தையும் தெரியப்படுத்துகிறது. 264 பிரதிநிதிகள் அடங்கிய சபையில் 216 இவனுடைய கக்ஷியைச் சார்ந்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஆங்கிலேய-எகிப்து ஒப்பந்தம்.** ஒன்று முன்பு அபிஸீனியா படையெடுக்கப் பட்ட சமயத்தில் கையெழுத்தாயிற்று. எகிப்து சண்டையில் ஈடுபடாத போதிலும், 'அதில் சேர்ந்த நாடுகள் சண்டையில் ஈடுபட்டால் மற்ற நாடு சண்டைக்குவரும். எகிப்திலுள்ள துறைமுகங்கள், விமான தளங்கள், போக்குவரவு முதலிய சாதனங்கள் எல்லாம் பிரிடனுடைய உதவிக்குக் கொடுக்கப்படும்.' ஆகவே எகிப்து படைகள் நேர்முகமாக சண்டையில் ஈடுபடாதபோதிலும் எகிப்திலுள்ள இதர உதவியை அங்குள்ள பிரிடிஷ் படைகள் பெறலாம். இவ்வுதவி பரஸ்பரம் இருந்துவருகிறது. எகிப்து அச்சு நாடுகளுடன் அரசியல் சம்பந்தத்தை விட்டுவிட்டது. பிரிடனுடன்

மாத்திரம் உண்மையான சிநேகத்துடன் இருந்துவருகிறது. பிரிடன் எதிர்பார்ப்பதும் இவ்வளவுதான். எகிப்து சண்டையில் ஈடுபடாமல் இருப்பதுதான் பிரிடனுக்கு அனுகூலம்.

வி வி வி வி வி வி வி

**முற்றுகைச் சண்டை.** ஸெபாஸ்டபூல் இவ்வாரம் எதிரிவசமாயிற்று. இதே விதமாக டொப்ரூக்கும், சிங்கப்பூரும் எதிரிவசமான அனுபவத்தைப் பார்த்தால் அரண்களுக்குள்ளிருந்து சண்டை செய்வது ஒருவிதத்தில் நன்மையென்று தெரிகிறது. முற்காலங்களில் ஒரு கோட்டைக்குள்ளிருந்து வருஷக் கணக்கில் எதிரிகளைத் தடுத்து நிற்க முடியும். ஆனல் நவீன பீரங்கி சண்டைகளில் அது பயன்படாது. தரையிலிருந்தும் விமானத்திலிருந்தும் குண்டுகளைப் போடுவதால் அரண்களைப் பிளந்துவிடலாம். இருந்தாலும் சில சாதகங்கள் இருக்கின்றன. அதிகமான எதிரிப் படைகளை ஒரே இடத்தில் சேரவிடாமல் செய்து அழித்துவிடலாம். எதிரியின் முன்னேற்றத்தைத் தடை செய்யலாம். இந்த இரண்டும் ஸெபாஸ்டபூல் சண்டையில் நடைபெற்றன. லக்ஷக்கணக்கான ஜெர்மானியர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான விமானங்களையும், பீரங்கிகளையும் எதிர்த்து சண்டை செய்யப்பட்டது. எதிரியின் வசந்தகாலத் தாக்குதல் தடையுற்றது. காகஸஸை நோக்கி எதிரி முன்னேறிச் செல்லமுடியவில்லை. பாதுகாப்பு முறையில், ஸெபாஸ்டபூல், டொப்ரூக், சிங்கப்பூர் இம்மூன்றுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சிங்கப்பூருக்கு கடல் பாதுகாப்பு மாத்திரம்தான் உண்டு. அது ஒரு திறந்த வெளி. பூமியில் ஜலமட்டம் வெகுசமீபத்தில் இருப்பதால் பாதுகாப்பு பள்ளங்கள்கூட வெட்டிக் கொள்ள முடியாது. மலேயாவில்தான் தரைப் பாதுகாப்பு செய்து கொள்ள முடியும். ஆனல் ஸெபாஸ்டபூலிலும், டொப்ரூக்கிலும் இயற்கை வசதிகள் அதிகம் உண்டு. ஸெபாஸ்டபூலைச் சுற்றிலுமுள்ள மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் பாதுகாப்பு ஸ்தலங்களை அமைத்துக்கொள்ளலாம். டொப்ரூக்கில் போதுமான வசதி உண்டுபண்ணப்பட்டிருந்தன. 1854-ம் வருஷத்தில் கடல் மூலமாகத் தாக்கப்பட்டு ஸெபாஸ்டபூல் எதிரி வசமாயிற்று. தற்போது தரை வழியாகத் தாக்கப்பட்டு எதிரி வசமாயிற்று. சிங்கப்பூரும் தரைத் தாக்குதலால் எதிரி வசமாயிற்று. மால்டா பிரிடனின் கடலாதிக்க உதவியால் சமாளித்து வருகிறது. ஸெபாஸ்டபூலுக்கு கடல் போக்குவரத்துகள் அதிகமில்லை. இருந்தாலும் பலமாதங்கள் எதிர்த்து நின்றதால் சரித்திரத்திலேயே அதிகக் கியாதியடைந்தது.

வி வி வி வி வி வி வி

**சைன.** யுத்தம் ஆரம்பித்து ஐந்து வருஷங்கள் முடிந்தன. ஜுலை 7 தேதி சைன யுத்தத்தின் ஐந்தாவது வருஷக்கொண்டாட்டம் நடைபெற்றது. அது வரை நடந்த விஷயங்களைக் கவனித்தால் சைன தைரியம், ஆத்ம சக்தி முதலியவைகளால் கடுமையான சந்தர்ப்பங்களில் எதிரியை எதிர்த்து நின்றது. எல்லாவித ஆயுதங்களையும் உபயோகிக்கும் கொடுமையான சத்ருவை எதிர்த்து சைன சமாளித்து வந்திருக்கிறது. அதே சமயத்தில் கல்வி, தொழிற்சாலை சமூகம் முதலியவைகளில் தகுந்த மாறுதல்களைச் செய்துகொண்டிருக்கிறது. எல்லா கௌரவமும் சியாங்கைஷேக்குக்கும் அவனுடைய மனைவிக்கும் தான். விமானத் தாக்குதல், கூட்டமாகக் கொலை, பட்டினி, ஸ்திரீ ஹத்தி முதலியவைகளை எதிரி செய்து கொண்டிருக்கும் போதே அவைகளிலெல்லாம் இருந்து இவர்கள் சீனமக்களை மீட்டியிருக்கிறார்கள். ஜப்பானிய யுத்தத்தில் 25,00,000 ஜப்பானியர் சேதப்பட்டிருக்கின்றனர். அதில் 10,00,000 கொல்லப்பட்டனர். உலகத்தில் எந்தப் பாகத்தில் சண்டை நடந்தாலும் "ஆக்கிரமண நாடு அழியவேண்டும்." "அச்சு நாடு அழியவேண்டும்" என்ற ஒரேபாட்டு தான். தற்போது சைன தனியாக சண்டை போடவில்லை. அதற்கு மீண்டும் உதவியளிக்கப்பட்டுவருகிறது. சைன யுத்தத்தின் ஐந்தாவது வருஷதினத்தன்று சியாங்கைஷேக் அனுப்பிய செய்தியை கவனிக்கவேண்டும்.

"ஆக்கிரமண நாடுகளை எதிர்த்து நிற்பதில் நாம் முன்னணியில் நிற்கிறோம்."
"ஆசியாவில் நடக்கும் சண்டையின் பாரத்தை சைன வகித்துக்கொள்ளும்."

# புதிய விமானங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

"புதிதாக விமானங்கள் உற்பத்தி செய்வதில் ஏற்கனவேயுள்ள திட்டங்களை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். அதன் பயனாக 1942-ம் வருஷத்தில் மட்டில் 60,000 விமானங்கள் தயாரித்துவிடலாம். அதாவது சென்ற ஒன்றரை வருஷங் களுக்கு முன் இருந்த விமான உற்பத்தியைக்காட்டிலும் 10,000 விமானங்கள் அதிகமாகக் கட்டிவிடலாம். இவைகளில் 45,000 யுத்த விமானங்கள் அதாவது, பாம்பர் விமானங்கள், பருந்துப்பாய்ச்சல் விமானங்கள், எதிரி விமானத்தைத் துரத்தும் விமானங்கள் அடங்கியுள்ளன. இவ்விதம் விமான உற்பத்தி வரவர அதிகரித்து வரும். அதன் காரணமாக 1943-ம் வருஷத்தில் 1,00,000 போர் விமானங்கள் உள்பட 1,25,000 விமானங்கள் தயாராகிவிடும்."

(பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட், ஜனவரிமீ 6, 1942).

யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கிய பிறகு ஒரு மாதத்திற்குள் மேற்சொல்லிய செய்தியை அமெரிக்கக் காங்கிரஸுக்கு பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு வெளியிட்டார். அப்பொழுது அமெரிக்கக் கைத்தொழிலுக்கு இதற்கு முன் கோரப்படாத பெரிய வேண்டு கோளாகக் கருதப்பட்டது.

அதன் பயனாக இப்பொழுது, ஜனாதிபதி செய்தியை விடுவித்த ஒரு சில மாதங்களுக்குள் அங்கு ஏராளமாக விமானங்கள் கட்ட ஏற்பாடாயிற்று. தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி நின்றுவிடவில்லை. இன்னும் அதிகமாகவே விமானங்கள் கட்டப்பட்டன. 1942-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் விமான தொழிற்சாலை 1941-ம் வருஷத்திலிருந்த விமான உற்பத்தியைக் காட்டிலும் நாலு மடங்கு அதிகமான விமானங்களை உற்பத்தி செய்தது.

அமெரிக்க ஆகாய விமானக் கைத்தொழில் எவ்வகைப்பட்டது? சமுத் திரத்தைத்தாண்டி பல இடங்களிலிருந்தும் வந்து அமெரிக்கா கண்டத்தில் பரவியிருக்கும் பலவகைப்பட்ட பெரிய ஆகாய விமான உற்பத்தி நடவடிக்கைகள் எவ்விதமானவை?

### *10 லக்ஷம் பயிற்சிபெற்ற தொழிலாளிகள்.*

நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமுள்ள ஏராளமான அமெரிக்கத் தொழிற் சாலைகளில் 10 லக்ஷம் பயிற்சிபெற்ற தொழிலாளிகள் அல்லும் பகலுமாக விமான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அதே மாதிரியாகவே யந்திரங்கள் செய்யும் தொழிற்சாலைகளில் மற்றொரு 10 லக்ஷம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அங்கு வெடிகுண்டு போட குறி பார்க்கும் கருவிகள், விமானத்தைச் செலுத்தும் கருவிகள், பீரங்கிகள், கவசங்கள் தேய்வுறும் யந்திர பாகங்கள், பலகைகள், அலுமனியம், எஃகு முதலியவைகள் தயாராகின்றன.

அலுமனியம் உற்பத்தி தொழிற்சாலைகளில் மின்சார சக்தியால் அதிகப் பிரகாசமாய் எரியும் அடுப்புகள், இருக்கின்றன. அங்கு உலைகளில் எஃகை உருவாக்கும்பொழுது ஏற்படும் பெரிய சப்தமும், பாம்பர் விமானத்தின் மேல் கவசத்தைப்போட்டு முடுக்கும் சப்தமும், எப்பொழுதும் கேட்ட மணியமாக இருக்கும். விமான பாகங்களை ஒன்றுசேர்க்க செம்மட்டியால் அடிக்கும்பொழுது நெருப்புப் பொறிகள் கிளம்பும்.

இவ்வளவையும் செய்து முடிக்க அமெரிக்கத் தொழிலாளிகளின் சக்தியைப் பொருத்திருக்கிறது. நியூ இங்கிலாந்திலிருந்து கலிபோர்னியா வரையிலும்முள்ள தொழிற்சாலைப் பிரதேசங்களில், யந்திர சாமான்களை மிகவும் சாமர்த்தியமாகத் தயாரிக்கும் சக்தி வாய்ந்த ஏராளமான தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

## டெட்ராயிட் மோட்டார் தொழிற்சாலை இப்பொழுது யுத்த தளவாட உற்பத்தி சாலையாக மாறிவிட்டது.

உலகத்தில் சமாதான காலத்தில் மோட்டார் உற்பத்திசாலைக்கு தலை நகரமான மிச்சிகனிலுள்ள டெட்ராயிட் என்ற இடம் இப்பொழுது அமெரிக்க யுத்தப் பிரயத்தனத்துக்கு அச்சாணி போல் இருக்கிறது. சொந்த உபயோகத்திற்கு மோட்டார்கள் உற்பத்தி செய்வது இப்பொழுது நின்று விட்டது. யுத்தப் பொருள்கள் தயாரிப்பதற்கு வேண்டிய மாறுதல்கள் பூராவும் முடிவாகிவிட்டது.

பொதுமக்கள் உபயோகத்திற்காக தயாரிப்பதை நிறுத்துவதற்கு முன் 1,00,45,527 மோட்டார்கள் தயாரித்த ஹென்றி போர்டின் பெரிய யந்திரசாலைகளும் இம்மாதிரி மாறிவிட்டது உண்மை. கடைசிமோட்டார் வேலை பூர்த்தியாகி கொட்டகைகளிலிருந்து வெளியேவந்தவுடன், யுத்தத்திற்குத் தேவையான யந்திரமும் தயாரிக்கப்பட்டு பின்னால் வெளியே அனுப்பப்பட்டது. நூற்றுக் கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள புதிய போர்ட் யந்திரசாலையில் ஒரே இடத்தில் 65,000 தொழிலாளிகள் கனமான பாம்பர்கள் கட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இங்கு பெட்டிமாதிரியுள்ள மோட்டார் வண்டியின் பரிமாணத்திற்குத் தக்கபடி இருக்கும் அலுமனியத் தகடுகளை பெரிய அச்சுக்களில் கொடுத்து பாம்பர் விமானம் கட்டுவதற்கு தகுந்தபடி அடிக்கப்படுகின்றன. ஓய்வில்லாமல் வரிசை வரிசையாக, அரைகுறையாகக் கட்டப்பட்ட பாம்பர்கள், தங்கள் தங்களுக்கு குறித்த வேலையைச்செய்ய தொழிலாளிகள் காத்திருக்கும் சந்துவழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

### உருவாக்குதல்.

அந்த விமானங்களுக்கு இறக்கைகள் சேர்க்கப்படுகின்றன. அதன்மேல் அவை விமானங்கள்போல தோன்ற ஆரம்பிக்கின்றன. பிறகு அந்த விமானங்களில் பெரிய மோட்டார்கள் பொருதப்படுகின்றன. மேலும் சரியான ஸ்தானத்தில் நாலு பெரிய துடுப்புகள் சேர்க்கப்படுகின்றன. பிறகு பாம்பர் விமானங்களுக்கு யுத்த தந்திரத்திற்கேற்றவாறு பல வர்ணங்கள் பூசப்படுகின்றன. பிற்பட்டு தொழிற்சாலைகளிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய் ஏராளமான விமானங்கள் வெளியே செய்து அனுப்பப்படுகின்றன, பிறகு அவைகள் பரிக்ஷிக்கப்பட்டு, பறக்க விடப்படுகின்றன.

இது ஒரு யந்திரசாலையைப்பற்றிய வர்ணனை. இன்னும் மற்ற இடங்களில் பெரிய புதிய ஆகாயவிமான உற்பத்தி யந்திரசாலைகள் இருக்கின்றன. அங்கு ஏற்கனவே உள்ளதைவிட இரண்டு மடங்கு அதிகமான விமானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆமாம். அவ்விமானங்கள் வந்துகொண்டிருக்கின்றன. விமானங்கள் அதிசீக்கிரத்தில் கட்டப்பட்டுவருகிறதுபோல் அவற்றை ஓட்டுவதற்கு விமானிகளும் துரிதமாகவும், செவ்வையாகவும், கணக்கில்லாமலும் பயிற்சியளிக்கப்படுகிறார்கள்.

அமெரிக்காவில் விமானப்படையை நடத்துவதற்கு அமெரிக்க ஆகாய விமானப்படையில் நார்வேயின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் மூன்று பங்குக்கு சமானமான 20 லக்ஷம் பேர்கள் இருப்பார்கள். குறைந்த பக்ஷம் 1,50,000 பேர்கள் சண்டைசெய்யத் திறமையுள்ள விமான ஓட்டிகளாக இருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் 1942-ம்வருஷ முடிவதற்குள் போருக்கு சித்தமாகயிருப்பார்கள். மேலும் அமெரிக்கக் கப்பற்படை வருஷா வருஷம் 30,000 கப்பற்படை ஆகாய விமானிகளுக்குப் பயிற்சியளிக்க திட்டம்போட்டிருக்கிறது.

பலர் முன்வந்தனர்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் தாக்கப்பட்ட சில மணிகளுக்கு அப்பால் ஒரு நகரத்தில்மட்டும் 700 பேர்கள் தரைப்படை, ஆகாய விமானப் பகுதிகளில் சேர்த்துக்கொள்ளும்படி மனுக்கொடுத்தார்கள். அந்த நாட்டில் பூராவும் இப்படியேயிருந்தது. எல்லாத்தொழில் பார்த்தவர்களும், விவசாயத்திலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும், எல்லாவித சமூகத்திலிருந்தும் வந்து சேர்ந்தார்கள். அமெரிக்கப் பொதுமக்களுக்கு மோட்டார் ஆகாய விமானம் ஓட்டக்கூடிய யந்திர சக்தி பொருந்தினவர்களும் வந்தார்கள்.

அநேக வருஷங்களாக இவர்கள் தாங்களே விமானங்கள் கட்டியும் அவைகளுக்குவேண்டிய என்ஜின்களைச் செய்தும் பறக்கவிட்டுவந்தார்கள். ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் மோட்டார் என்ஜினைப்பற்றியும், தேசப்படங்களைப்பற்றியும் நன்ருய்த் தெரியும். அமெரிக்கர்கள் சுறுசுறுப்பான வர்கள். தேகப்பயிற்சி பெற்றவர்கள். துணிவுள்ளவர்கள், தீரச்செயல்கள் செய்யக்கூடிய வர்கள். இவர்கள் ஆகாய விமானத்தில் செல்வதற்கு ஆசையுள்ளவர்களாக இருக்கிருர்கள். இப்பேர்ப்பட்டவர்கள்தான் இந்த தேசத்தின் ஆகாய விமானப் படையில் சேர்ந்திருக்கிருர்கள்.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு வேண்டிய விமானங்கள் இருக்கின்றன. அதைப் பறக்கவிடுவதற்குப் போதுமான மாலுமிகளுமிருக்கிருர்கள். நேசதேசத்தார்கள் ஆகாய விமானத்தில் ஆதிக்கம் பெற்று ஸ்வதந்திரம் பெறுவதற்காக இவர்கள் பேருதவிசெய்து வருகிருர்கள்.

---

## ஹிட்லர் பேரில் ஜெர்மானியருக்கு நம்பிக்கை குறைகிறது.

(ஒரு அமெரிக்கர் ஜெர்மனியிலிருந்து எழுதியது).

ஜெர்மனி பூராவும் தற்சமயத்தில் சந்தேகம் பரவிவருகிறது. நாஸி அரசாட்சிக்கு எங்கும் செல்வாக்கு இல்லை. ஜனங்களின் முணுமுணுப்பு அதிகமாகிவருவதால் பெரிய நகரங்களிலுள்ள உபாத்தியாயர்கள், நகரசபைத் தலைவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்களுடைய ஸ்தானத்தையும், ஏ. ஆர். பி. ஸ்தாபனங்களையும் ராணுவ அதிகாரிகள் வசப்படுத்திவருகின்றனர். இவ்விதமாக ஜனங்கள் வசப்படாமல் போய்விடுவார்களோ என்று பயந்து, ஹிட்லர் ராணுவத்திற்குப் பிராபல்யம் கொடுத்துவருகிருன்.

ஹிட்லருக்கு ரொம்ப விருப்பமான மூனிச் நகரத்தில்கூட இவ்வித நிலைமை ஏற்பட்டுவருகிறது. சண்டையிலிருந்த ஒரு குஷி குன்றிவிட்டது. யுத்தம் சீக்கிரத்தில் முடியுமென்று வாயால் சொல்லப்படுகிறதே தவிர முடியவில்லை. அதற்கென்ன காரணமென்று ஜனங்கள் அறிய விரும்புகின்றனர்.

இதற்குப் பதில் சொல்லாமல் ஹிட்லர் ருஷ்யாவுக்குச் சென்று 1942-ம் வருஷத்தில் நிலைமை சரியாக இருக்கிறதாகச் சொல்லுகிருன்.

“யுத்தம் தோற்று வருகிறது. எங்களுடைய பிள்ளைகளையும், பெண்களையும் சைனியங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அனுப்பிவிட்டோம். எங்களுடைய சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டனர். எங்களுடைய வீடுகள் எரிகின்றன. நாங்கள் விமானப் பாதுகாப்பு ஸ்தலங்களில் மறைந்துகொண்டு கிடக்கிருேம்” என்று ஒரு பெரிய ஜெர்மன் வியாபாரி என்னிடம் சொன்னுன்.

நான் அதன் உண்மையைக் கண்டுகொண்டேன்.

“ஆனல் நீங்களடைந்த லாபங்கள் அதிகமாக இருக்குமே? ஐரோப்பா பூராவும் வியாபித்திருக்கிறீர்களே” என்று சொன்னேன்.

"நாங்களாகத்தான் நாசத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். ஹிட்லர் உண்டாக்கி இருக்கிறான் என்று சொல்லுவது பொருத்தமாகும். தேசத்திற்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்த்து ஜனங்கள் கவலைப்படுகின்றனர். நகர சபைகளின் தலைவர்களில் 80 சதவிகிதம் தள்ளப்பட்டு, ராணுவ அதிகாரிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பள்ளிக்கூடங்களிலும் அவ்விதம்தான். உபாத்தியாயர்களுக்குப் பதிலாக ராணுவ அதிகாரிகள் இருக்கிறார்கள்" என்று அவன் பதில் சொன்னான்.

இதை நான் கவனமாகக் கேட்டேன். இதிலிருந்துதான் மூனிச், கோலோன், பெர்லின் முதலிய நகரங்கள் துக்ககரமாகக் காணப்படுவதற்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டேன்.

"ராணுவத் தலைவர்களுக்குப் பள்ளிக்கூடங்களைப்பற்றி என்ன தெரியும்" என்று கேட்டேன்.

"உண்மைதான். நாஸி ஆக்ஷியில் சைனியத்திற்கு அடுத்தபடிதான் படிப்பு. பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் நாஸிகளுடையும் வெற்றிகளைப் பற்றி அதிகம் சொல்லாததால், பையன்களுக்குப் பொய்யான கதைகளையெல்லாம் சொல்லி உத்ஸாகத்தை மூட்டவே ராணுவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று நான் சொன்னதை ஒப்புக்கொண்டு பதில் சொன்னான். ஆச்சரியத்துடன் நான் தலையை அசக்கினேன்.

"நகரசபைத் தலைவர்களை மாற்றியதற்கு என்ன காரணம்" என்று கேட்டேன்.

"அதுவும் அவ்விதம்தான். ஜனங்கள் நம்பியிருந்தபடி யுத்தம் முடிந்துவிடும் என்று இவர்களும் நினைத்தார்கள். ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும் வெளியிட்டனர். அதன் பயனாகத்தான் பதவியை இழந்தார்கள்" என்று சொன்னான்.

## பெர்லின் மேயர் மறைகிறார்.

சில நாட்கள் கழித்து ஒரு காரியமாக பெர்லின் சென்றேன். எல்லாவற்றையும் ராணுவ அதிகாரிகள்தான் நடத்துகிறார்கள். மேயர் எங்கு சென்றான் என்று ஒருவருக்கும் தெரியாது. நாஸி வெற்றியைப்பற்றி அதிகம் சொல்லிக் கொடுக்காத உபாத்தியாயரை சைனியத்தில் சேர்த்து அதற்குப் பதிலாக ராணுவத் தலைவர்கள் இருக்கிறார்கள்.

"இது சரிதான. உமது பையன் பள்ளிக்கூடத்தில் எவ்வாறு படித்து வருகிறான்" என்று ஒருவரைக் கேட்டதற்கு, "வரவர கீழ் நோக்கிப் போகிறான். படிப்பு ஏறவில்லை. பாடங்களும் நடக்கவில்லை. சைனியத்தில் உள்ளோரைப் போல் கசரத்துதான் செய்யப்படுகிறது. யுத்த சம்பந்தமான தந்திரங்களும், படமெழுதவும் கற்றுக்கொள்ளப்படுகிறது. உறக்கப் பேசவும் கூடாது."

இதுதான் சரியான உண்மை. ஜெர்மானியரே இதை ஒப்புக்கொள்ளுவது ஒரு விசேஷ விஷயம். ஒரு காலத்தில் நமக்கு நன்மை ஏற்படும்படி நம்பி நாஸிகள் சொற்படி ஜனங்கள் நடந்துகொண்டார்கள். இப்பொழுது நன்மை ஏற்படாததால் முணுமுணுக்கிறார்கள்.

ஹைஸ்கூல் உபாத்தியாயராக ஒருவனிருந்து ஒரு சிறு பிழை செய்தால் போதுமானது. உடனே வேலையிலிருந்து நீக்கப்படுவான். கடைசி வரையில் அவனுக்கு நல்ல கதியே கிடையாது. ரகசியப் போலீஸார் அவனைக் கவனித்து வருவார்கள். குற்றத்தைப் புதிதாகச் சாற்றுவார்கள். அவனுக்கு எவ்வளவு சாக்ஷிகள் இருந்தாலும் பிரயோசனப்படாது. ராணுவத்திலுள்ளோர் வார்த்தைகள்தான் ஏற்படும்.

### சரியான திருஷ்டாந்தம்.

அண்டர்டன் லிண்டன் என்ற இடத்திற்குச் சமீபத்தில் நானும் ஒரு ஜெர்மானியரும் நின்றுகொண்டிருக்கும்போது ஒருவனைச் சுட்டிக்காட்டி, "அவனுடைய கதியைப்பார்; அவன் ஒரு பெரிய மனிதன். ஏழைகளுக்கு எத்தனையோ தர்மம் செய்திருக்கிறான். தற்சமயத்தில் அவன் நாலுபேர்களுடைய உதவியை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது" என்று காண்பித்தான்.

நான் இந்தப் பக்கமாக திரும்பிப் பார்த்தேன். கிழிந்த ஆடை அணிந்து கொண்டு மார்வரையில் தொங்கும் மீசையோடு இளைத்துப்போன அவன் அன்று என்னைப் பார்த்த பார்வை இன்னும் ஞாபகமிருக்கிறது

அவன் என் பக்கமாகச் சென்றதும், மீண்டும் நாங்கள் பேசத்தொடங்கினோம்.

அவன் ஒரு வைத்திய கலாசாலையில் போதகனாக இருந்தான். நாஸிக் கொள்கைகளைச் சொல்லிக்கொடுக்காததினால் அவனுக்கு ஒருதடவை எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. மீண்டும் அவர் உட்படாததால் பதவியை இழந்தான். பிறகு ஜெயிலில் அடைக்கப்பட்டான். மறுபடி அவன் நல்ல நிலைமைக்கு வர முடியாதபடி நாஸிகள் செய்துவிடுவார்கள்" என்று என் சிநேகிதன் சொன்னான்.

அது சரி. அவனுடைய ஸ்தானத்திற்கு நாஸிக் கொள்கைகளுடன் மற்றொருவனை நியமித்தார்களா" என்று கேட்டேன். என் சிநேகிதன் வெறுப்புடன் ஒரு சிரிப்பு சிரித்தான்.

வைத்திய கல்லூரி மாணவர்களுக்கு ராணுவ உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார். ரொட்டியையே சரியாக வெட்டத் தெரியாத அவன் ரண வைத்தியத்தை எவ்வாறு செய்யப்போகிறான். இப்போதுள்ள ஜெர்மன் வைத்தியர்கள் எல்லாம் இப்படித்தான்".

ஐரோப்பாவில் ஹிட்லர் நடத்திவரும் சண்டையைப்பற்றி பெரிய ஜெர்மன் நகரங்களிலுள்ள பொதுமக்களுக்கு அசிரத்தை ஏற்பட்டுவருகிறது. பெர்லினுள்ளோருக்கு ஜீவனமே கஷ்டமாகயிருக்கிறது.

நான் சொல்துவது என்னவென்றால், ஜனங்கள் இவ்வாறு முணுமுணுப்பது ஹிட்லருக்குத் தெரியும். அதறகாகவேதான் பெரிய ஸ்தானங்களில் நாஸி ராணுவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு அடக்கி விடலாம் என்று நினைத்திருக்கின்றனர்.

இவ்விதமாக கோபமடைந்த ஜனங்களை அடக்குவதில் ராணுவத் தலைவர்கள் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் ஹிட்லரும், அவனுடைய சகாக்களும் ஆக்கிரமணத்தில் ஈடுபடுவார்கள். ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்துபோல நாடுகள்தான் இன்னும் பாக்கியிருக்கின்றனவே!

---

## ஜப்பானின் விமான யுத்த தந்திரம். நாஸி முறைகளுடன் ஒப்பிடமுடியாது.

(கென்னத் பிண்டாப் எழுதியது).

### குண்டுகளைப்போடும் முறைதான் முக்கியமானது.

உலகத்தில் எல்லாவிடங்களிலும் உள்ள வெடிகுண்டுகள் யாவும் ஒரேமாதிரிதான். ஆனால் அவற்றைப் போடும் மாதிரி அந்தந்த தேசத்தார்களுக்குத் தகுந்தபடி அநேக விதமாக மாறியிருக்கிறது. இது விவரத்தை நான் பிரிடன் பேரில் விமானத் தாக்குதல் நேரிட்டதிலும், பிறபட்டு சிங்கப்பூரைப் பிடிப்பதற்காக மலேயாவில் யுத்தம் நடந்தபொழுதும் கண்டுபிடித்தேன்.

ஜப்பானியர்கள் பிறர்களைப் பார்த்து காப்பியடிப்பதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் என்று சொல்லுவதுண்டு. ஆனால், இப்பொழுது அவர்கள் நடத்திவரும் விமானத் தாக்குதல்களில், அலாதியாகப் பிறருக்குத் தெரியாத தங்கள் வல்லமையைக் காட்டிவருகிறார்கள். மேலும் இந்த பஸிபிக் யுத்தத்தில் அவர்கள் உபயோகித்த தந்திரங்களிலும், முன் யோசனைகளிலும் அவர்களின் விமானத் தாக்குதல் ஒரு நூதன முறையென்பதற்குப் போதுமான ருஜு இருக்கிறது.

விமான யுத்த தந்திரத்தைக் கவனித்தால் அதை நாலு வகையாகப் பிரிக்கலாம். (1) லக்ஷியத்தைத் தீர்மானிப்பது; (2) தாக்கும் முறை; (3) உபயோகப்படுத்தும் விமானங்களை அமைக்கும் விதம்; (4) காலம் (பகல் அல்லது இரவு).

லக்ஷியத்தைப் பொருக்குவதில் விமானப்படைத் தலைவர் மூன்றுவித முறைகளைக் கையாளலாம். முற்றிலும் ராணுவத் தன்மையுள்ள லக்ஷியங்கள், அதாவது பீரங்கிகள், கோட்டைகள், யுத்தக் கப்பல்கள், விமானத் தளங்கள் வகையராமட்டில் தாக்குவதாக வைத்துக்கொள்ளலாம். மற்றபடி மறைமுகமாகப் பொதுமக்களைத் தாக்குவதற்காகப் போக்குவரத்து சாதனங்களையும், உணவுப்பொருள், ஸப்ளை மார்க்கங்களையும், புகை, தண்ணீர், மின்சாரம் வசதிகளையும், இன்னும் மற்ற உயர் நிலையாயுள்ள ஸாதனங்களையும் அழிக்கலாம்; அல்லது கண்மூடித்தனமாகப் பொதுமக்கள்பேரில் வெடிகுண்டுபோட்டு, பீதி உண்டாக்கி, உணர்ச்சியைக் குறையச்செய்து நேராடியே தாக்கிவிடலாம்.

ஆகாய விமானத் தாக்குதல் தந்திரத்தில் ஜெர்மன் முறைகளையும், ஜப்பானிய முறைகளையும் ஒப்பிட முடியாது.

யுத்த ஆரம்பகாலமுதல் லுப்ட்வாபி பிரிடனைத் தாக்கிவந்தபொழுது நாஸி விமானிகள் எதிர்ப்பு வரமுடியாத இடங்களான ஜனங்கள் வசிக்கும் ஜில்லாக்கள், ஆஸ்பத்திரிகள், மாதாக்கோவில்கள் இவைகளைப் பார்த்துத் தாக்கினார்கள். ராணுவ லக்ஷியங்கள்பேரில் தாக்கினால் தரையெதிர்ப்பு ஏற்படுமென்று எதிர்பார்த்து அங்கு தாக்கவில்லை.

இதற்கு மாறாக ஜப்பானியர்கள் முக்கியத் தன்மைவாய்ந்த லக்ஷியங்களை எவ்வளவு பலமான தரையெதிர்ப்பு இருந்தபோதிலும், அதை கவனியாமல் அதிகப் பிடிவாதத்துடன் தாக்கிவருகிறார்கள்.

சிங்கப்பூர் தீவுக்குமேல் வரிசைக் கிரமமாக வந்த கூட்டத்திலுள்ள ஒரு பாம்பர் விமானத்தை நல்ல இடத்தில் வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்பு பீரங்கி குறிபார்த்து நேராகத் தாக்கியதை நான் கண்டேன். இந்த பீரங்கி வெடியானது அந்த பாம்பரில் வெடிகுண்டு வைத்திருக்கும தட்டில் தாக்கியிருக்கவேண்டும். ஏனென்றால், பீரங்கிக்குண்டுபட்ட விமானமும், அதற்கு இரு பக்கங்களிலுமுள்ள இரண்டு கனமான விமானங்களும் தீப்பற்றிக்கொண்டு, கண் குருடுபடும்படியான பிரகாசத்துடன் எரிந்தன. அந்த வெடியின் அதிர்ச்சியினால் பாக்கி விமானங்கள் புயல் காற்றில் அகப்பட்ட கப்பல்கள்போல் அசைந்தாடின. ஆனால் உடனே இடைவெளியில்லாமல் அவைகள் ஒன்று சேர்ந்து தங்கள் லக்ஷியத்தைத் தாக்க பறந்து சென்றன.

### உயரமும், எண்ணிக்கையும்.

பிரிடன்பேரில் ஜெர்மானியர்கள தாக்கும்பொழுது 14,000 அடி உயரத்திலிருந்து தாக்கினார்கள். ஆனால் ஜப்பானியர்கள் தாங்கள் வெடிகுண்டு போடுவதில் நம்பிக்கைகொண்டு இன்னும் அதிக உயரத்திலிருந்து தாக்குகிறார்கள். மலேயாவில் போட்ட வெடிகுண்டுகள் 22,000 அடி அல்லது அதற்கு மேலும் உயரமாக இருந்து போடப்பட்டன.

ஒரு சமயத்தில் ஒரு லக்ஷியத்தின்பேரில் பாய்ச்சல் விமானங்களுடன் ஜெர்மானியர்கள் ஏராளமான விமானங்களை, அல்லது 60 முதல் 80 விமானங்கள் வரை அனுப்பினார்கள். ஜப்பானியர்களோ விமானங்களைப் பரவலாக அனுப்பும்

கொள்கையை ஆதரிக்கிறார்கள். அவர்கள் பாய்ச்சல் விமானங்களை ஒன்றாகவோ, இரண்டாகவோ அனுப்பி தரையிலுள்ள லக்ஷியங்களை ஒரே சமயத்தில் அநேக இடங்களில் தாக்கும்படிக்கும், விமான எதிர்ப்புக்காரர்களைச் சோர்வடையச் செய்யலாம் என்ற நம்பிக்கையுடனும் மாறி மாறி விமானங்களை அனுப்புகிறார்கள்.

விமான கோஷ்டிகளை நியமிப்பதிலும், ஜப்பானியர்கள் தங்கள் சாதனங்களைப் பரவச்செய்யும் கொள்கையையே காட்டியிருப்பது தெளிவாக விளங்கும். மலேயாவில் ஆகாய விமான எச்சரிக்கை ஒலித்தபொழுது 9 விமானங்கள் கொண்ட பாம்பர் கோஷ்டிகள் அநேக வரிசைகளாக வந்தன.

அதிக எண்ணிக்கைகொண்ட விமானங்களை அனுப்புவதில் ஜெர்மானியர்கள் அதிக சாதகமடைந்தார்கள். ஒரு திசையில் எவ்வளவு அதிகமான விமானங்கள் அனுப்பக்கூடுமோ அவ்வளவு விமானங்களை அனுப்புவதற்கு ஜெர்மானியர்கள் எப்பொழுதும் பிரயத்தனப்பட்டார்கள். ஒருக்கால் இம்மாதிரி ஆகாய விமானக் கூட்டங்களைக்கண்டு தெருவில் போகும் பிரிடிஷ்காரரைப் பயப்படச் செய்ய எதிர்பார்த்தார் போலும். ஒரு தாக்குதலில் நூற்றுக்கணக்கான நாஸி விமானங்களைப் பார்ப்பது, நேர்த்தியான காக்ஷியில்லை என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு நாஸியைப் பார்க்கக்கூட பிடிக்கவில்லை.

## காலக்கிரமம்.

ஜெர்மன் முறைகளுக்கும், ஜப்பானிய முறைகளுக்கும் காலக்கிரமத்தைப் பார்த்தாலும் ஒவ்வாமை இருப்பது தெரியும்.

முதல் முதலில் பிரிடனை நோக்கி ஹிட்லரின் விமானங்கள் பறந்துவந்த பொழுது, அவைகள் நீல நிறமுள்ள பிரகாசமான ஆகாயத்தில் சிறு வெள்ளி நிறமுள்ள நக்ஷத்திரங்கள்போல் காணப்பட்டன. அதிர்ஷ்ட வசமாக அவற்றைக் காட்டிலும் அதிகப் பிரகாசமாகவும், அதிகத் திறமையுமுள்ள நக்ஷத்திரங்கள் அவைகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தன. உடனே நாஸி விமானங்களும் அவர்கள் அரசியலில் உள்ள மற்ற தலைவர்கள்போல் இருட்டில் மறைந்துவிட்டார்கள்.

மலேயாவில் நடந்த போரில் முதல் சில வாரங்களில் ஜப்பானியர்கள் சிங்கப்பூருக்கு இராக் காலத்தில்தான் வந்தார்கள். தாத்காலிகமாகத் தங்களுக்கு விமான பலம் அதிகமென்றும், தாங்கள் அதில் ஆதிக்கம் செலுத்தலாமென்றும் அவர்கள் திருப்தியடையும்வரை அவர்கள் பகற்காலத் தாக்குதலுக்குத் துணியவில்லை. இது ஒரு விஷயத்தில்தான் நாஸிகளுக்கும், ஜப்பானியர்களுக்கும் ஒற்றுமையாயிற்று. அதாவது நேச தேசத்தார்களின் ஸ்பிட்பையர் விமானங்களுக்கும் ஜெர்மானியரைப் போல ஜப்பானியர்களும் பயமடைந்தார்கள். கொளும்பு சம்பவத்திற்குப் பிறகு இந்த பயம் இன்னும் அதிகரித்திருக்கிறது. இந்த தேசத்தில் இனி பகற்காலத்தில் தாக்குதல்கள் நேரிடுமானால் அதிக எச்சரிக்கையின் பேரில்தான் நடத்துவார்கள்.

இந்தியா நேர்முகமாகத் தாக்கப்பட்டால், ஆகாய விமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் வேலையிலிருப்பவர்களுக்கும், விமானப் பாதுகாப்பு வேலையிலிருப்பவர்களுக்கும் இந்த மாறுதல்களைத் தெரிந்துகொள்ளுவது அவசியமானது. இந்தியாவில் பாதுகாப்பு முறைகள் பெரும்பாலும் லண்டன் சம்பவங்களிலிருந்து தெரிந்துகொண்டதாக எனக்குத் தெரிகிறது. இந்த முறைகளைக் கற்றுக்கொள்ளுவதற்குத் திறமையான வழி எப்பொழுது இல்லையோ அப்பொழுது பற்பல விரோதிகளுக்குப் பற்பல மாறுதலுள்ள பாதுகாப்பு முறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

# தன் பேரில் குற்றஞ்சாட்டுவோருக்கு மிஸ்டர் சர்ச்சிலின் மறுமொழி.

[" யுத்தத்தை நடத்துவதின் முக்கிய பொறுப்பை வகிக்கும் நான் யுத்த முயற்சியிலோ, யுத்தத்தை நடத்துவதிலோ கொஞ்சமும் பின்வாங்க வில்லை யென்று என்னால் உறுதிகூற முடியும்.

" ஆசியாவில் அதிக நஷ்டமடைந்தாலும், லிபியாவில் தோல்வியடைந்தாலும், அமெரிக்காவுக்கு அருகில்பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டாலும் நேசநாடு களின் நிலைமை திருப்திகரமாகவே இருந்துவருகிறதென்று சொல்லலாம்.]

## கட்டுப்படுத்தப்படாத ஜனநாயக ஸ்வதந்திரம்.

யுத்த சமயத்திலும் நமது பார்லிமெண்டு ஸ்தாபனங்களுக்கு இருக்கும் ஸ்வதந்திரத்திற்கு இது எவ்வளவு சிறந்த உதாரணமென்று பாருங்கள். ஸர்க்காரிட முள்ள நம்பிக்கையைக் குறைப்பதற்கு மனதில் தோன்றியதெல்லாம் சொல்லப் படுகின்றன. மந்திரிகள் திறமையற்றவர்களென்றும், தங்கள் தங்கள் இடங்களில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் கெடுக்கவும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவில் சைனியத்திற்கு அவநம்பிக்கை உண்டாக்கவும், சிரமப் பட்டுத் தயாரிக்கப்படும் ஆயுதங்களில் தொழிலாளர்களுக்கு அவநம்பிக்கையைச் செய்யவும், மந்திரிகள் யாவரும் பொம்மைகள் என்றும், அவர்களைப் பிரதம மந்திரி ஆட்டிவைக்கிறார் என்றும், அப்பேர்ப்பட்டவரை உலகத்தின் முன்னால் அவமானப்படுத்தவும் பல விதமாக சொல்லப்படுகின்றன.

இது யாவும் தந்தி, ரேடியோ மூலமாக உலகம் பூராவும் பரப்பப் படுகின்றன. நமது நண்பர்கள் மனக்கிலேசமடைகின்றனர். இந்த மிகப் பெரிய ஆபத்துக் காலத்தில் வேறு எந்த தேசமோ, எந்த சபையோ தைரியமாக உபயோகிக்காத இந்த ஸ்வதந்திரத்திற்கு நான் பூரண ஆதரவை அளிக்கிறேன்.

இப்பொழுது எகிப்தில் நடந்துவரும் மகத்தானதும், அதிக நெருக்கடி யானதுமான போராட்டத்திலிருந்து என் கவனத்தை ஆகர்ஷித்து இந்த விவாதத் தில் பூரணமாகச் செலுத்துவது கஷ்டமாக இருக்கிறதென்று சொல்லுகிறேன். எந்த நிமிஷத்திலும் மிகவும் முக்கியமான செய்தி வரக்கூடும்.

நான் தவறான அறிக்கைகளை வெளியிடுவதாக மிஸ்டர் ஹோர் பலிஷா என்மீது குற்றம் சாட்டுகிறார். 8 மாதங்களுக்கு முன் லிபியாவில் துவக்கப்பட்ட தாக்குதலையே அவர் முக்கியமாகக் குறிப்பிட்டார். இத்தாக்குதல் தோல்வி யடைய வில்லை. நமது சைனியங்கள் 40,000 எதிரிகளைப் பிடித்து 400 மைல் தூரம் எதிரிகளை விரட்டியடித்தன. ஓய்வெடுத்துகொண்டு எதிரிகளால் அரண் செய்யப் பட்ட நிலயங்களை நமது சைனியங்கள் பிடித்தன. ஸிரெனைகா கோடி வரையில் எதிரிகள் விரட்டப்பட்டனர். அந்தப் போரில் அவர்களுடைய டாங்கிகள் 70, 80-க்கு வந்ததும் 150 மைல் மேற்கே பின்வாங்கினர்.

10,000 ஜெர்மானியர் சிறை பிடிக்கப்பட்டனர்.

இந்த விஷயமானது நமக்கும் அங்குள்ள சைனியத்திற்கும் அதிக கௌரவத்தைக் கொடுக்கிறது.

## மாறிய நிலைமை.

சென்ற 15 தினங்களில் ஸிரெனைகாவிலும், எகிப்திலும் ஏற்பட்ட ராணுவ துரதிர்ஷ்டங்களால் அந்தப் பிரதேசத்தில் மற்றுமன்றி மத்தியதரைக்கடல் பூராவிலும் நிலைமையே மாறியிருக்கிறது.

நாம் 50,000 பேர்களுக்கு மேல் இழந்தோம். அவர்களில் பெரும் பான்மையோர் கைதிகள் ஆனார்கள் எவ்வளவோ தளவாடங்கள் அழிக்கப்பட்டும், இன்னும் ஏராளமானவை எதிரி வசமாய்விட்டன. துருக்கி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரெஞ்சு வட ஆபிரிக்கா ஆகிய இடங்களில் ஜெனரல் ரோமலின் முன்னேற்றத்தின் பயனாக எவ்வளவு கெடுதலான விளைவுகள் ஏற்படுமென்று இன்னும் அளவிடுவதற்கில்லை.

மத்தியதரைக்கடலிலும், மத்தியக்கிழக்கிலும் நமது நம்பிக்கையும், எதிர்காலத்தையும் எந்த நிமிஷத்திலும் எதிர்க்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை பிரான்ஸ் விழுந்ததிலிருந்து இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது.

## டொப்ருக்.

டொப்ருக் பிடிபடுவதற்கு முன் ஆச்சின்லக்கிடமிருந்து ஓர் தந்தி வந்தது. அதன்படி போகியபடை அங்கு வைக்கப்பட்டிருப்பதாயும், பாதுகாப்பு அரண்கள் நல்ல ஸ்திதியில் இருப்பதாகவும், துருப்புகளுக்கு 90 நாட்களுக்குப் போதுமான ஸப்ளைகள் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருந்தது.

ஸொல்லம், ஹல்பாயா முதலிய இடங்களிலிருந்து நமது நிலைகளைப் பலப்படுத்திக்கொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அதிக உதவிப்படைகள் வந்ததும் தனது நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம் என்றும் ஆச்சின்லக் நினைத்திருந்தான். இத்தீர்மானத்தை ஆச்சின்லக்குத்தான் செய்தார். இதை இந்த மந்திரி சபை அங்கீகரித்தது.

எல்லா சந்தர்ப்பங்களிலும் யுத்தரங்கத்தில் தனது சைனியத் தலைவனின் தீர்மானந்தான் முடிவானது. அவனுடைய தீர்மானத்தை நாம் தப்பென்று நினைத்தால் நாமும் தவறுதல் செய்வதாக ஆகும். அரசாங்க சம்பந்தமாக எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராகயிருக்கிறேன்.

## தளகர்த்தரின் தீர்மானம்.

டொப்ருக் பணிய வேண்டுமென முடிவு செய்தது அக்கோட்டையின் தளகர்த்தர். அது சிறிதும் எதிர்பாராதது.

பிரிடனிலிருந்து ஒரு பெரிய தூதை மேற்கொண்டு சென்ற தலைவர் எவரும் என்னைப்போல் தாய் நாட்டிலேயே இவ்வளவு தூரம் அபவாதத்திற்குள்ளானதில்லை. எனக்கும் பிரிடிஷ் மக்களுக்குமுள்ள பந்தமும், அசைக்கமுடியாத நம்பிக்கையும்தான் கஷ்டம் நிறைந்த அந்த நாட்களில் எனக்கு நிம்மதியளித்தது.

## வாஷிங்டன் பேச்சுகள்.

துருப்புகள் நடமாட்டம், கப்பல்கள், பீரங்கிகள், விமானங்கள், கப்பல் நஷ்டங்களைச் சமாளிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது ஆகிய விஷயங்களைப் பற்றியே அமெரிக்க தூதின்போது நாங்கள் பேசினோம்.

ஆங்கிலம் பேசும் இருநாடுகள் இப்பொழுதுபோல் எக்காலத்திலும் இவ்வளவு நெருங்கிய உறவு கொண்டதில்லை. இந்த இருநாடுகளும் எதிரியைத் தோற்கடிக்கும் விஷயத்திலும் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் பொறுத்துக்கொள்வதிலும், எல்லாவித தியாகங்களைச் செய்வதிலும், அதிக ஒற்றுமையைக் காண்பித்தன.

கப்பல் நஷ்டத்தைக் குறைப்பதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும், அமெரிக்காவிலும் கட்டப்படும் கப்பல்களின் எண்ணிக்கையைக்கொண்டு 1943-ல் அதிகக் கப்பல்கள் நமது வசமிருக்கும்.

## டொப்ருக் வீழ்ச்சி.

நமது யுக்திவாதங்களால் போரரங்கத்திலுள்ள தளகர்த்தர்கள் மீது அவநம்பிக்கை ஏற்படாமலிருப்பதற்காக சில உண்மை விவரங்களைக் கொடுக்கிறேன்.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்குப்போய் ஜூன்மீ 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நான் ஜனாதிபதியின் அறைக்குச் சென்றபோது டொப்ரூக் விழுந்தது என்ற செய்தியைக் கேட்டு நான் திடுக்கிட்டேன்.

அது எனக்கு எத்தனை மனோவேதனையை அளித்ததென்பதை சபையினரே உணர்ந்து கொள்வார்கள்.

வெற்றி பெறுவோமென்று எதிர்பார்க்க நல்ல நியாயமான நிலைமைகளிருந்த போது ஆரம்ப கட்டங்களிலேயே நாம் தோற்கடிக்கப்பட்டோமென்பதுதான் இப்போரில் அதிக மனோவேதனை அளிக்கக்கூடிய அம்சமாகும்.

## மால்டா.

இரண்டு மூன்று விமான தளங்களைக்கொண்டு மால்டாவைப்போல் வேறெந்த நாடும் எதிரியை எதிர்த்து நிற்கவில்லை. 12 விமானங்கள் இருந்த போதிலும் களைக்காமல் சண்டை செய்தது.

மால்டாவில் இப்பொழுது விமானபலம் முன்னைவிட அதிகமிருக்கிறது. எதிரிகள் மால்டாவைப்பிடிக்கவில்லை. ஆபிரிக்காவுக்கு ஏராளமாக சாதனங்களை அனுப்ப அவர்களால் முடிந்தது.

## லிபியா யுத்தம்.

இந்தப் பிரதேசத்தில் நேசதேசச் சைனியத்திற்குப் பீரங்கிகளும், டாங்கிகளும், அதிகமாக இருந்தன. இவைகளில் ஹாவிட்ஸர் என்ற பீரங்கிப்படையும் இருந்தது.

விமான ஆதிக்கம் எப்பொழுதும் குறையவில்லை. எதிரி முதலில் சண்டை ஆரம்பிக்காமலிருந்தால் ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே நாம் முன்னேற்றப் போரைத் துவக்கியிருப்போம்.

அவன் சண்டையை ஆரம்பித்ததால் நமது அரண்களிலிருந்து எதிர்ப்பது நலம் என்று தீர்மானிக்கப்பட்டது. பலமான குறுக்கு எதிர்ப்புகளைச் செய்து அவனைத் தடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது மேமீ 26-ம்வ இருந்த நிலைமை. யுத்தத்தின் நிலைமையை பற்றி இன்னும் பூராவும் சொல்லமுடியாது. அவசரமான முடிவுக்கு வருவது தவறாகும். முக்கிய அம்சங்களைமாத்திரம் ஊகித்துக்கொள்ளலாம். முதல் சில தினங்களில் டொப்ரூக்கைப் பிடித்துவிடலாமென ரோமல் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு எதிர்ப்பு தீவிரமாகவிருந்ததால் அவருடைய திட்டங்கள் சீர்குலைந்து போய் இரு தரப்பிலும் டாங்கிகளின் நஷ்டம் வெகுவாக ஏற்பட்டது. இருந்தாலும் தான் உட்புகுந்த இடங்களில் அவர் விடாப்பிடியாக நின்று நம்மைத் தாக்கிச் சிதைத்ததால் பலன்தரத்தக்க முறையில் எதிர்க்க முடியவில்லை.

ஜூன்மீ 4-ம்வ மறுபடி ஒரு பிரயத்தனம் செய்யப்பட்டது, இதிலும் நஷ்டம் ஏற்பட்டது. அடுத்தபடியாக பிர்ஹாகீமைச் சுற்றி சண்டை முற்றியது. அங்கிருந்தும் பின்வாங்கத் தீர்மானிக்கப்பட்டது.

## துரதிர்ஷ்டமான நாள்.

இதுதான் நிலைமையை மாற்றியது. ரோமலும், அவனுடைய படையும் தினம் முன்னேறிக்கொண்டே வந்தன. நைட்ஸ்பிரிட்ஜ், அக்ரோமாவைச் சுற்றி சண்டை நடந்தது. ஜூன்மீ 13-ந்தேதி வரை போர் சரிசமமான நிலையிலிருந்தது. ஆனால் ஜூன்மீ 13-ந்தேதி ஒரு மாறுதலேற்பட்டது.

அன்று காலையில் நம்மிடம் 300 டாங்கிகளிருந்தன. அன்று சாயங்காலத்திற்குள் 70 டாங்கிகளுக்கு மேல் நம்மிடமில்லை. இதற்குச் சரி சமானமான நஷ்டத்தை எதிரிக்கு விளைவிக்காமல் நாம் இவற்றை இழக்க நேரிட்டது.

அன்றைய போரில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. தகவல்களைக் கொடுப்பதற்கு மட்டும நான் ஜவாப்தாரி. பிரிடிஷ் ஸர்க்காரால் இவ்விளைவுகள் ஏற்பட்டனவா என்பது பற்றி முடிவுசெய்யவேண்டியது சபையைச் சார்ந்ததாகும்

இவ்விதம் நமது டாங்கிகள் நாசம் செய்யப்படவே ரோமலின் பலம் தீர்மானமாக அதிகரித்தது.

கஸாலா நிலைமையிலிருந்தும், பின்வாங்கி ஹல்பாயா, கபுஸோ, ஸொல்லம் இந்நிலைகளுக்குப் போவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## மெர்ஸாமெட்ரூ.

டொப்ருக் வீழ்ச்சியைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். டொப்ருக் விழுந்ததினால் மெர்ஸா மெட்ரூவுக்கு வாபஸாக வேண்டியதாயிற்று. நடுவில் 125 மைல தண்ணீர் அகப்படாத பாலைவனப்பிரதேசம்.

இடையில் 15 நாள் அவகாசம்" கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜூன் மீ 26-ம்வ யன்றே ரோமல் யந்திரப்படைகளுடன் முன் தோனறினான். 27-ம்வ நமது படைகளுக்கும், அவன் சைனியத்திறகும் சண்டை நடந்தது. எதிரிக்கு அதிக நஷ்டம் உண்டாக்கப்பட்டதென்றே சொல்லலாம்.

ஜெர்மனியின் பான்ஸர்படையைச் சார்ந்த 100 முதல் 1[illegible]0 வரையுள்ள டாங்கிகள் எதிர்த்து வந்ததால் நாம் கொஞ்சம் பின்வாங்கவேண்டிவந்தது. நமது சைனியத்திற்குப் போயுள்ள அல்லது போய்க்கொண்டிருக்கும் உதவிப்படைகளைப்பற்றி நான் சபைக்கு எடுத்துக்கூறும் நிலைமையிலில்லை. அவை ஏராளமாக அனுப்பப்படுகின்றனவென்று மட்டும் நான் சொல்லுவேன். ஆனால் போர் முடிந்து விட்டதாக நாங்கள் கருதவில்லையென்றே நான் சொல்லுவேன்.

## இந்தியாவுக்குள்ள ஆபத்து.

சிறிதுகாலத்திற்கு முன் படையெடுப்பு பயம் இருந்துவந்த இந்தியாவுககு பல முக்கியமான பிரிடிஷ் படைகள் போகவேண்டியிருந்தது. மத்தியக் கிழக்குக்குப் போகவிருந்த இந்தியாவிலுள்ள இதரப்படைகளை அங்கேயே வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. மத்தியக்கிழக்கில் சைனியத்தைப் பலப்படுத்தச் சென்ற இரண்டு வருஷங்களாக பிரிடிஷ் ஸர்க்கார் மிகவும் பாடு பட்டிருக்கிறது. 9,50,000 சிப்பாய்கள், 4 500, டாங்கிகள், 6,000 விமானங்கள், 5,000 பீரங்கிகள், 50,000 யந்திர பீரங்கிகள், 1,00,000 யந்திர சாதன வாகனங்கள், முதலியன போயிருக்கின்றன. பிரிடனில் ஆயிரக்கணக்கான கவசம் பூண்ட வண்டிகளை வைத்துக்கொண்டு எதிரியைத் தடுக்கவேண்டிருக்கிறது. முதலில் செய்யப்பட்ட சிறிய டாங்கிகளில சிலவற்றைப் பழுதுபார்க்க வேண்டி வந்தது. மாட்டில்டா, வாலன்டைன் போன்ற டாங்கிகளும் உபயோகமாகயிருந்தன. ருஷ்யாவில் வாலண்டைன் டாங்கிகள் உபயோகமாக இருந்தன. நைல் நதி தீரத்திற்கு 4,500 டாங்கிகளும், ருஷ்யாவிற்கு 20,000 டாங்கிகளும் அனுப்பப்பட்டன.

## பாய்ச்சல் விமானங்கள்.

பாய்ச்சல் விமானங்களைப்பற்றி விமானிகளுக்கு அவ்வளவு கௌரவ அபிப்பிராயம் கிடையாது. அவ்வபிப்பிராயத்தை நாமும் கவனிக்க வேண்டியது தான். அவைகளைப் பார்த்துத்தான் 8 பீரங்கிகள் கொண்ட பைடர் விமானங்கள் செய்யப்பட்டன. இவைகள் பிரிடன பேரில் நடந்த விமானப்போரில் அதிகம் ஈடுபட்டன.

சைனியத்தின் உதவிக்கு பாய்ச்சல் விமானங்களும் தேவையென்று அறிந்து அவைகளைச் செய்வதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன்பே ஆர்டர் அனுப்பப்பட்டது. இன்னும் பூர்த்தியாகவில்லை. இந்த பாம்பர்களைபபற்றி குறைகூறுவது தவறு. ஜெர்மனிபேரில் செயயப்படும் போருக்கு அதிக உதவியாக இருக்கின்றன.

மின்னல் படையெடுப்பு காலங்களில் மாத்திரம் இவைகள் பிரயோஜனப் படமாட்டா. நமது தாக்குதல்களின் வேகம் குறையாதென்பது ஜெர்மானியருக்கும் தெரியும். இவ்விதத் தாக்குதல்களால் ஜெர்மனியின் கப்பல் தளங்களும் ஆயுதசாலைகளும் அழிக்கப்படும்.

## தலையிடுவதில்லை.

எதிரியுடன் செய்யும் சண்டைகளில் உபயோகிக்கும் சைனியங்களில் நான் தலையிடுவதில்லை.

சண்டை ஆரம்பிக்கும் முன் ஜெனரல் ஆசின்லக்கையே தலைமை வகிக்கும்படி நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இருந்தாலும், அவர் தலைமை வகிக்காமலிருப்பதற்குத் தகுந்த முகாந்தரங்களைச் சொல்லி, ரிச்சியை சண்டைசெய்ய அனுமதித்தான் ஆனால் ஜூனமீ 25உ ஆச்சின்லக் தாமே தலைமைப் பதவியை வகித்தார். அரசாங்கம் இதை அங்கீகரித்தது. போர்அரங்கத்தில் தலைமை வகிப்போருக்குத்தான் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்பது தெரியும்.

அரசாங்கம் நமது சார்பாக இருக்கிறதென்பது ஊர்ஜிதமானால்தான் ஜெனரல்கள் துணிச்சலான காரியங்களைச் செய்வார்கள். இங்கிலாந்தில் என்ன நடக்கிறதென்பதைப்பற்றி அவர்கள் அதிகம் கவலைப்படாமலிருக்கவும் முடியும். அரசாங்கம் துணிகரமாக நடக்க வேண்டுமானால் சபை அங்கத்தினர்களின் உதவியிருக்கவேண்டும்.''

## ஆச்சின்லக்கை நம்புங்கள்.

ஆசின்லக்தான் பூராத்தலைமை வகிக்கிறார். சண்டை அதிக மும்மரமாக நடக்கிறது. நமது உதவி இருப்பதாக அவருக்குத் தைரியம் கூறியிருக்கிறேன். அந்த நம்பிக்கைக்குத் தகுந்தவாறு அவர் நடந்து கொள்ளுவார்.

நான் சபையை ஏமாற்றுவதாகச் சொல்லப்படும் கூற்றை நான் மறுக்கிறேன். நடக்கும் விஷயங்களைத் தைரியமாகக் கவனிக்க வேண்டுமென்று மாத்திரம் இச்சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்ற அபிப்பிராயம் எனக்குக் கிடையாது. நீண்டகால யுத்தமாகத்தானிருக்கும். வெற்றியோ, தோல்வியோ வருவதாகக் காணப்பட்டதும் இந்த யுத்தம் முடியாது. முடிவுவரை சண்டை செய்துதான் ஆகவேண்டும்.''

## ருஷ்ய எதிர்ப்பு.

ருஷ்யர்கள் எதிரிகளை எதிர்த்து நிற்பதுதான் ஒரு விசேஷம். பாதி கோடைகாலம் வந்துவிட்டாலும் இன்னும் ஒரு பெரிய ஜெர்மன் தாக்குதலும் ஆரம்பிக்கப்படவில்லை. தற்சமயம் கார்கவ்விலும், கர்ஸ்கிலும் நடக்கும் சண்டையை வேண்டுமென்றால் பெரிய தாக்குதல் என்று அவர்கள் சொல்லலாம்.

ருஷ்ய அரசாங்கமும், ஜனங்களும் ஜனநாயகங்களுடன் அதிக பாந்தவ்யத்தைக் கொண்டாடுகின்றன. தீவிரமாக மேலும் சண்டையைச் செய்வார்கள்.

ருஷ்யர்கள் ஹிட்லருக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கின்றனர். வெற்றியோ, மரணமோ இரண்டில் ஒன்றையடையும்வரை சண்டை செய்வார்கள்.

இந்த விஷயம் மிகவும் முக்கியமானது. அடுத்தபடியாக நேசநாடுகளின் பலம் விருத்தியடைந்துகொண்டேபோகிறது.

ஆகாய விமானங்களாகிற அஸுரருடன் ஹிட்லர் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டான். அந்த அஸுரனுக்குக் கொடுக்கவேண்டிய பலி ஓடிவிட்டதால் ஹிட்லருக்கும் அஸுரனுக்கும் சண்டை உண்டாகிவிட்டது. விமான பலம் ஹிட்லரின் எதிரிகளின் பக்கம் போய்விட்டது என்று கருத்து.

## தூரக்கிழக்கு.

கடந்த ஆறு மாதகாலமாக தூரக்கிழக்கிற்கு நமது ஸப்ளைகள் போய்க்கொண்டேயிருக்கின்றன. மாதம் 60,000 பேர்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்குமுன் ஆஸ்திரேலியாவில் படையெடுப்பு நேருமென்று யாவரும் பயந்தனர். பிரிடிஷ் படைகளும் அங்கே போக சித்தமாக இருந்தன. ஆனால் ஜப்பான அதைப் படையெடுக்காது என்றே நினைத்தேன். ஏனென்றால் அமெரிக்கச் சைனியம் ஒன்று இருக்கிறது. அதை எதிர்த்தால் ஜப்பானுக்குத்தான் ஆபத்து.

தற்போது தென்மேற்கு பஸிபிக்கில் 'தாக்குவது' என்பதையே குறிப்பாகக் கொண்டுள்ளன.

இந்தியா பலமாகத் தற்காப்பு செய்யப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் மக்களும் இந்தியர்களும் அடங்கிய சைனியம் வேவலின் கீழிருக்கிறது. அதிக ஆபத்துக்குள்ளாக இருந்த ஸிலோன், கப்பல், விமானம், சைனியம் இவைகளால் பாது காக்கப்பட்டிருக்கிறது.

மெடகாஸ்கரில் ஒரு பாதுகாப்பு ஸ்தலம் கிடைத்திருக்கிறது. பஸிபிக்கில் கப்பல் பலம் நமது வசத்தில்தானிருக்கிறது."

## ரோமலை அழிக்க.

இந்தியப் பாதுகாப்புகளில் சண்டையில்லாததால் எகிப்திற்குச் சைனியங்களை அனுப்ப முடிகிறது.

இந்த உதவியினாலும், சீதோஷ்ண நிலையாலும் ரோமலின் சைனியத்தை சீக்கிரத்தில் அழித்துவிடமுடியும்.

இந்த நிமிஷத்தில் எகிப்து நிலை மிக நெருக்கடியாக இருக்கிறது. திராசின் முனைபோல் இருக்கிறது. ஆகவே மிகவும் முக்கியமானது.

நமக்கு இருக்கும் லக்ஷியமென்னவென்றால் எதிரிகளின் படைகளை அடியோடு அழிக்கவேண்டியதுதான். பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் உதவி போய்க்கொண்டிருக்கின்றன".

## மத்தியமமான வழி கிடையாது.

நமது பிராணன்களைக் காக்கவே சண்டை செய்கிறோம். வெற்றி நிச்சயம் என்பதை இப்போதே நிச்சயம் செய்யமுடியாது.' நமது கடமைகளைச் சரிவரச் செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

நமது சபையின் எல்லா அங்கத்தினர்களின் அபிப்பிராயமும் ஒன்று சேரவேண்டும், பயந்தவர்கள் அரசாங்கத்தை நடத்தவேண்டாம்.

என்னை இந்த யுத்தத்தை நடத்தவொட்டாமல் தடுப்பதென சிலர் நினைக்கின்றனர். நான் உங்களுடைய சேவகன். என்னைத் தள்ளுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. கடுமையான அதிகாரத்தைச் செலுத்தி சண்டையை நடத்துவதற்கான அக்கரையுடன் என்னை வைத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் வேண்டாம்.

### கொடுங்கோல்?

பாதுகாப்பு மந்திரி பதவியை ஒரு ராணுவத் தலைவனிடம் ஒப்படைத்து சிப்பந்திகளை நியமிப்பதோ, போர்த் தலைவர்களை நியமிப்பதோ, எல்லாம் அவனிடம் கொடுத்துவிட்டு என்னைத் தள்ளும்படி செய்யவேண்டுமென்று ஸர் ஜான் வார்டுலா மிலினி நினைக்கிருர். அவ்வித ராணுவ மந்திரியே சர்வ ஸ்வந்திரத்துடன் இருக்கவேண்டுமென்றும் அவருக்குக் கீழ் ஒரு ராஜகுமாரனைப் போட்டு சைனியங்களை ஒப்படைத்தால் போதுமென்றும் அபிப்பிராயப்படுகிருர்.

இந்தத் திட்டம் நமது பார்லிமெண்டு திட்டத்திற்கு உரியதல்ல. இதனுல் கொடுங்கோல் ஆட்சி ஏற்படலாம்.

அவ்வித ஆட்சியில் எனக்குப் பதவி வேண்டியதில்லை. ஆகவே நமது தேசிய அரசாங்கத்தின் பேரில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்ருல்தான் பிரிடனுக்கு க்ஷேமம். யாவரும் நன்ருக உழைப்பார்கள். எதிரிகளையும் அடக்கமுடியும்.''

[குறிப்பு:—ஸர்ஜான் வார்டுஸா மில்னி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு சாதகமாக 25 பேரும், பாதகமாக 475 பேரும் ஒட் செய்ததால் தீர்மானம் தோற்றது.]

---

## விமானப் படையெடுப்புப் பாதுகாப்புப்படை (ஏ. ஆர். பி.)யில் சேர்ந்துகொள்.

---

ஒரு கட்டடத்தின் பேரில் குண்டுகள் விழுந்து அக்கட்டடம் மட்டில் சேதமாவதற்கு பதிலாக, முன் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளாமல் அஜாக்கிருதையாக இருந்ததால் அருகிலுள்ள மூன்று கட்டடங்களும் சேதமாகின்றன.

இதைப்போலத்தான் பல நகரங்களில் நடக்கிறது. குண்டுகள் விழுந்ததும் தீ உண்டாகிப் பரவுகிறது. ஒரு கட்டடத்தில் கிளம்பிய தீ நகரம் பூராவும் அழிவதற்குக் காரணமாகிறது.

குண்டுகளால் ஏற்பட்ட நெருப்புகளைச் சாதாரண சமயங்களுக்காக ஏற்பட்டிருக்கும் நெருப்பு அணைக்கும் கோஷ்டியினரால் அணைத்துவிட முடியாது. ஆனுல் அதற்கென்று பயிற்சி பெற்ற ஏ. ஆர். பி. வேலைக்காரர்களைக்கொண்டு சேதத்தைக் குறைத்துக்கொள்ளலாம். தீ பரவாமல் ஓரிடத்திலேயே அணைத்தும் விடலாம். தீ பிடித்த வீடுகளிலுள்ளோரை ஏ. ஆர். பி. கோஷ்டியினர் மீட்கிருர்கள். காயமடைந்தோருக்கு சிகித்சை செய்யப்படுகிறது. விரிந்த கட்டடங்களையும், இடிந்த கட்டடங்களையும் அப்புறப்படுத்தி போக்குவரவு, அமைதி முதலியன மறுபடி ஏற்படுத்தப்படுகின்றன.

தங்கள் நகரங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் பொதுமக்களுக்கும் அக்கரையிருக்கவேண்டும். அனுதையான அண்டை வீட்டுக்காரர்களுக்கு ஒத்தாசை செய்வதும், துன்பத்தை நீக்கி உயிர்களைக் காப்பாற்றுவதும் ஒவ்வொருவரின் கடமையாகும். இவ்வித வேலைகளில் தற்சமயம் பயிற்சி பெறுவதால், அவரவர்களுடைய வீடு, வாசல், சொத்து முதலியவைகளுக்கு படையெடுப்பு காலங்களில் அழிவு ஏற்படாமல் செய்வதற்கு சாத்தியமாகுமென்பதை யாவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மற்ற நகரங்களுக்கு நேர்ந்த விபத்து இங்கும் நேரலாமாதலால் ஏ. ஆர். பி. படையில் சேர்ந்துகொள்ளுங்கள்.

## சேதம் ஒரே இடத்தில் நேருகிறதா, அல்லது எங்கும் வியாபிக்கிறதா ?

இதற்குத் தகுந்த பதிலை ஏ. ஆர். பி. படையினர்தான் சொல்ல முடியும். சாதாரணமான நெருப்பு அணைக்கும் கோஷ்டியினரால் அணைக்க முடியாத தீக்களை ஏ. ஆர். பி, படையினர் அடக்கி அணைத்துவிடுவார்கள். தீயைப் பரவாமல் செய்து சேதத்தைக் குறைப்பார்கள். இடிந்த வீடுகளுக்குள்ளும் தீ பரவிய வீட்டினுள்ளும் இருக்கிற ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் முதலியோரை மீட்டுவார்கள். காயமடைந்தோருக்கு வைத்தியம் செய்வார்கள். முக்கியமான போக்குவரவு தடைபடாமல், தெருக்களை சுத்தப்படுத்துவார்கள். இடிந்த செங்கல் முதலியவைகளை அப்புறப்படுத்தி அமைதியை ஸ்தாபிப்பார்கள்.

ஆனால் இந்த அனுபவத்தை சில பட்டணங்களில் சுலபமாகப் பெறவில்லை.

ஒரு குண்டு விழுந்து தீ உண்டானால் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் பரவும். சில சமயங்களில் நகரம் முழுவதுமே அழியக் காரணமாகலாம். இவ்வித அழிவுக் குள்ளாகாமல் இருப்பது ஒவ்வொரு பொதுமக்களின் கடைமையாகும். ஆபத்தி லுள்ள அயலார்களை மீட்டி, அவர்களின் பிராணன்களைக் காப்பாற்றுவது ஒவ் வொருவருக்கும் ஏற்பட்டுள்ள அக்கரைதான். பிறருக்கு உதவி செய்வதால் தங்களுக்கும் உதவி செய்துகொண்ட மாதிரிதான. முன்னடியே ஏ. ஆர். பி. பயிற்சி பெற்றிருந்தால் படையெடுப்பு நேரங்களில் பிராணன், சொத்து, குடும்பம் முதலியவைகளுக்கு ஆபத்து இல்லாமல் செய்துகொள்ளலாம்.

---

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| | | **பிரஸங்கம் 103—(5-வது பிரிவு).** | | |
| ஜூலை ...12, | ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| 13, | திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |
| 14, | செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| 15, | புதன்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| 16, | வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| 17, | வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| | | **பிரஸங்கம் 104—(1-வது பிரிவு).** | | |
| 18, | சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | ,, | 6.45 |
| 19, | ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| 20, | திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |
| 21, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 22, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. ... | ,, | 6.30 |
| 23, | வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| 24, | வெள்ளிக்கிழமை... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—14-7-42.